தனிப்பிரதி விலை அணா 0—1—6.

ரிஜி. No. M. 3036-1937-ஆம் 1.

PAHUTHARIVU ("REASON")

மலர் 3. இதழ் 1.

# பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ் வேறு. சொற்பகாப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.


அறிவே விடுதலை (பாட்டு) (சாமி சிதம்பரனார்) 1
மெய்யாகவே ஒரு கடவுளுண்டா? (எம். ஜே. காலின்) 3
ஐந்துக்கு இரண்டு பழுதில்லை (சித்திரபுத்திரன்) 16
பகுத்தறிவுக்குத்தடை (டாக்டர் சி எல். டி. அவாயின்) 24
சாஸ்திரி—பிள்ளை சம்பாஷணை (கோமாளி) 31
காதலோகாதல்! (கதை) (ஜே பி. கிருஷ்ணன்) 35
"சங்கராசார்ய சுவாமிகளும்" மலையாளமும் (வைக்கம்) 49
ரஷ்யாவில் சிறுவர்கள் (கபில கந்துவார்ச) 54
பொது வுடமை ஏற்பாட்டில் கிரிமினல் குற்றங்கள் 61

# பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

—(O)—

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1937. மே 1. { இதழ் 1.

## அறிவே விடுதலை.

(சாமி சிதம்பரனார்.)

(ஆனந்தக் களிப்பு)

பல்லவி.

அறிவே விடுதலை என்போம்—அதுவே
அனைவர்க்கும் இன்பம் அளித்திடும் என்போம் (அறிவே)

சரணங்கள்.

1. ஆயிரங் காலத்துச் செய்கை—யாக
ஆயினும் அறிவினுக் கொத்தில தாயின்
சீயென் றவைகளைத் தள்ளி—மிகவும்
சிறப்புடன் வாழும் நெறியுணர் வோமே (அறிவே)

2. மேதினி வாழ்ந்திடும் மக்கள்—யாரும்
மேன்மைக் குலத்தில் ஒன்றெனக் கொள்வோம்
சாதி மதங்களைத் தாக்கி—பெரும்
சங்கடம் யாவும் அழித்திடு வோமே (அறிவே)

3. சாதி மதங்களைப் போற்றும்—கெட்ட
சாத்திரம் எவருரை யாயினும் அவைகள்
ஆதி கடையொடும் போக—பெரும்
ஆத்திரத் தோடெரி யுண்டிடச் செய்வோம்! (அறிவே)

4. அறிவிற் குரிமையும் தந்தே—இந்த
அவனியில் யாரும் அதன்வழிச் செல்லின்
வறியவர் செல்வருள் நிகழும்—சண்டை
வாடிச் சமத்துவம் வளர்ந்திடும் கண்டீர்! (அறிவே)

5. உழைக்கும் மனிதர்கள் எல்லாம்—இங்கே
உணவின்றி வாடுதல் நீதியோ உலகீர்!
பிழைத்திடும் சோம்பல் மிகுந்தோர்—மிக்க
பேரின்பம் பெற்றிங் கிருத்தலும் முறையோ? (அறிவே)

6. அச்சம் அகற்றுவோ மாயின்—நாம்
அணுத்துணைத் துன்பமும் பெற்றிட மாட்டோம்;
நிச்சயம் அறிவுகைக் கொண்டால்—நேரில்
நில்லாமல் ஓடிடும் அச்சமும் கண்டீர்! (அறிவே)

7. பெருநிதி என்பதும் அறிவே—இதனைப்
பெரிதும் மனத்தினிற் கொள்ளுவீர் இனிதே
அரும்பொருள் எத்துணை பெறினும் இங்கே
அறிவினுக் கவையெல்லாம் ஒப்பல்ல காணும்! (அறிவே)

8. ஆண்மையும் ஊக்கமும் அறிவே—அதுவே
ஆற்றும் அருஞ் செயல் செய்திடத் துணையே
கேண்மையும் சுற்றமும் அறிவே—அதுதான்
கேடில் சமத்துவம் கிளைத்தெழும் வித்தே (அறிவே)

---

# மெய்யாகவே ஒரு கடவுளுண்டா?

(எம். ஜே. காவின்)

(அறிஞர் தோழர் எம். ஜே. காவின் அவர்களால் எழுதப்பட்ட "மெய்யாகவே ஒரு கடவுளுண்டா" என்ற ஆங்கில புஸ்தக மொழிபெயர்ப்பின் ஒரு பகுதியை 1936ம் வருடம் செப்டம்பர்மாதப் "பகுத்தறிவி"ல் பிரசுரித்தோம். அப்புத்தகத்தின் மற்ற பகுதிகள் இம்மாதப் "பகுத்தறிவி"லிருந்து தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படும்.—ப—ர்)

## ஜிஹோவா (யூதர்கள் கடவுள்.)

ஆதி காலத்தில் ஜிஹோவா யூதர்களின் கடவுளாயிருக்கவில்லையென்பதை நாம் முக்கியமாக உணரவேண்டும். ஜிஹோவா மிடியானிட்டஸ் என்பவனின் கடவுளாக இருந்தான். அவன் ஒரு அராபியன். மிடியானிட்டசினிடமிருந்து யூதர்கள் ஜிஹோவாவைப் பெற்றுக்கொண்டார்கள். அப்பால் யூதர்களிடமிருந்து ஐரோப்பியர்கள் ஜிஹோவாக் கடவுளைப் பெற்றுக்கொண்டார்கள். ஜிஹோவா ஒருகோத்திரக்காரர்களுக்கு கடவுள். அதுவும் போர்க்கடவுளாக ஜிஹோவா வணங்கப்பட்டான். போர்த்துறையிலும் ஜிஹோவா மாத்திரம் கடவுளாக இருக்கவில்லை. கானன் நாட்டிலுங்கூட பல கோத்திரக் கடவுள்களில் ஒருவனாகவே ஜிஹோவா வணங்கப்பட்டு வந்தான். யுத்தகாலங்களில் சிடோனியர்கள் என்பவர்கள் அஷ்டோரியத்து என்ற கடவுளையே துணையாக நம்பியிருந்தார்கள்.

அம்மொணைட்ஸ் என்பவர்கள் மில்காம் என்ற தெய்வத்தை வணங்கினார்கள். மேயோலயிட்ஸ் என்பவர்கள் செமோஷை என்னும் கடவுளை வணங்கினார்கள். போர்களில் வெற்றிபெற யூதர்கள் ஜிஹோவாவின் உதவியை நாடினார்கள்.

காலக்கிரமத்தில் யூதர்கள் எழுதப் படிக்கக்கற்றுக் கொண்டார்கள். அவர்களுடைய இலக்கியம் மதசம்மந்த முடையதாகவே இருந்தது. மற்ற ஜாதியார் மீதுள்ள வெறுப்பையும் அவர்கள் நூல்களில் குறித்து வைத்தார்கள்; அவைகளை மிகைப்படுத்தி தமது கடவுளின் பெருமையைக் கொண்டாடினார்கள். எல்லாத் தெய்வங்களையும் விட ஜிஹோவாவை அதிக பலசாலியெனக்கூறி அவர்கள் கதை கட்டி வைத்தார்கள்.

ஜிஹோவாவின் சக்திப் பெருக்கையும் காப்பாற்றும் தன்மையையும் ஜனங்கள் நம்ப வேண்டுமென்பதற்கு ஆக அவர்கள் பல போர்களையும் வெற்றிகளையும் கதை மூலம் கற்பனை செய்தார்கள். யூதர்களின் முன்னோர்களிடம் ஜிஹோவா நேருக்கு நேர் நின்று பேசியதாகவும் பரதேசங்களுக்கு அவர்களை நடத்திச் சென்றதாகவும் சட்டங்கள் ஏற்படுத்தி மதத்தை ஸ்தாபித்ததாகவும் அவர்களைக் கண்ணுங்கருத்துமாயிருந்து காப்பாற்றி வந்ததாகவும் அயல் நாட்டாரைக் கொன்று அவர்களுடைய நாடுகளையும் உடைமைகளையும் கைப்பற்ற உதவி புரிந்ததாகவும் பல வழிகளிலும் யூதர்களைத் தன் பிரத்தியேக அநுக்கிரகம் பெற்ற செல்வக் குழந்தைகளாய் மதித்து வந்ததாகவும் சாஸ்திரம் எழுதிவைத்தார்கள். மத வெறிகொண்ட மூர்க்கர்களான தீர்க்கதரிசிகளும் அசத்தியத்தையே உருவாய்க்கொண்ட பூசாரிகளும் அந்தக் கதைகளை சதா பாராயணம் செய்து கடவுளே அவைகளைத் திருவாய் மலர்ந்தருளியதாக பாமர மக்களுக்குக் கூறி ஏமாற்றி வந்தார்கள். அந்தக் கதைகளுக்கு மக்கள் அடிமைப் படுத்தப்பட்டார்கள். மத குருமாருக்குப் பயந்து பாமரமக்கள் அவர்கள் சொல்வதையெல்லாம் மெய்யென நம்பினார்கள். அந்தக் கதைகள் எல்லாம் கடைசியில் திரட்டப்பட்டு ஒரு புத்தகமாக வெளிவந்தது. அவைகளே பரிசுத்தமான விவிலிய நூல் அல்லது பைபில் என்பதாக ஆயிற்று.

## 1

பைபிலில் விளக்கப்பட்டிருக்கும் கடவுள் தான் கிறிஸ்தவ உலகத்தின் கடவுள். அந்தக் கடவுள் மெய்யான கடவுள்தானா என்று ஆராய்ந்து பார்ப்போம். பைபில் நூற்படி கடவுள் மக்களை சிருஷ்டித்து அவர்கள் நல்லவர்கள் எனக் கண்டாராம். நன்மைக்குப் பரமசத்துருவான சாத்தானை—

அவன் தம் மக்களைக் கெடுத்து விடுவான் என்று தெரிந்திருந்தும் கடவுள் சிருஷ்டித்தாராம். உத்தமர்களாயிருந்த மக்களை பாவப்படு குழியில் தள்ளிப் பாவிகளாக்கிய சாத்தான் முதல் நாளிலேயே வெற்றி பெற்றதை அந்தக் கடவுள் பார்த்துக்கொண்டு தானிருந்தார்; அப்படியெல்லாம் நிகழுமென்று கடவுள் அறிந்துதான் இருந்தார்; வாஸ்தவத்தில் அந்த துரதிர்ஷ்ட நாடகம் நடக்கும்படி அவர் வசதியளித்துக் கொண்டிருந்தார். உண்மையான கடவுள் தனக்கு ஒரு எதிரியை சிருஷ்டித்து அவனால் தனது உத்தம சிருஷ்டிகள் கெட்ட வழியில் செலுத்தப்படுவதைப் பார்த்துக்கொண்டு இருப்பாரா? இதனாலேயே இந்த கடவுள் சங்கதி ஆரம்பம் முதற்கொண்டே அது கட்டுக்கதை போலவே தோற்றுகிறது.

2

நூற்றாண்டுகள் பல சென்றன; மனிதவர்க்கம் முன்னேற்றமடைய வில்லை. எட்டுப்பேர் நீங்கலாகப்பாக்கியுள்ள உலக மக்கள் அனைவரையும் ஒரு ஜலப்பிரளயத்தில் ஆழ்த்திக்கொல்லக் கடவுள் உறுதி செய்தார் என்றால் கடவுள் தன் மக்களைப்பிரளயத்தில் ஆழ்த்திக்கொன்றதேன்? உலகத்தை தன்புத்திரபுத்திரிகளின் பிரேதங்களினால் மூடியதேன்? அவர்கள் தீயவர்களாயிருந்ததினாற்றான் அவர் அவ்வாறுசெய்தாரா? அப்படியானால்அவர்களை அவர் ஏன் சீர்திருத்தவில்லை? அதைவிட, சாத்தானைக் கொன்று தன் மக்கள் பரிசுத்தமாய் வளரும்படி அவர் ஏன் செய்யவில்லை? உலக முழுதையும் பிரளயத்தினால் அழிக்குமாறு தனக்குக் கோபம் மூளும்படி செய்ய சாத்தானுக்குச் சக்தியளித்த கடவுளின் தன்மை எப்பேர்ப்பட்டதென நோக்குங்கள். அப்பேர்ப்பட்ட கடவுள் ஒரு உண்மையான கடவுளாயிருப்பாரா?

3

இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைகளாயிருந்தார்கள். பாரோ என்ற கொடுங்கோலன் அவர்களைப் பல வழிகளிலும் ஹிம்சித்தான். இஸ்ரவேலர்களை விடுவிப்பதற்காக பாரோவை மட்டுமன்றி, ஒரு பாபமுமறியாத எகிப்தியர் அனைவரையுங் கூட தண்டிக்கக் கடவுள் எண்ணினார். அவர் தண்டனை

யளித்த விதம் எப்படிப்பட்டது என்று பாருங்கள். 1. எகிப்திலுள்ள தண்ணீரையெல்லாம் இரத்தமாக மாற்றினார்; 2.எகிப்தியர் வீடு, அறைகள், படுக்கை முதலிய சமஸ்த இடங்களிலும் அருவருப்பான தவளைகளை நிரப்பினார்; 3. எகிப்தியர் உடல் முழுதும் பேன்களால் நிரப்பினார்; 4. ஈக்களால் அவர்களை ஹிம்சித்தார்; 5. கொள்ளை நோயால் அவர்களுடைய கால் நடைகளைக் கொன்றார்; 6. தீயாலும் பனி மழையாலும் அவர்களுடைய சாகுபடிகளை அழித்தார்; 7. மீதமான உணவுப்பொருள்களையெல்லாம் தின்றழிக்குமாறு நாடு முழுதும் வெட்டுக்கிளிகளைப் பரவ விட்டார்; 8. மூன்று நாள் எகிப்து முழுதும் இருள் சூழும்படி செய்தார். எனினும் அவருக்குத் திருப்தியேற்படவில்லை. மேலும் பாரோவின் ஹிருதயம் கடினமாகும்படி செய்தார்; எதற்காக என்றால் ஒரு பாவமும் செய்தறியாத ஜனங்கள் மீது மீண்டும் அதிகப்படியான பழி வாங்குவதற்காகவாம். அப்பாலும் அவர் என்ன செய்தார் என்று பாருங்கள். பாரோ அரசனின் தலைக் குழந்தை முதல் சிறையிலிருக்கும் கைதிகளின் தலைக் குழந்தைவரை—எகிப்திலுள்ள தலைக் குழந்தைகள்வரை யெல்லாவற்றையும் அவர் கொலை செய்தார். எகிப்து முழுதும் ஒருவராவது மரணமடையாத வீடே இல்லாதாயிற்றாம்.

பாதகன் ஒருவன் குற்றத்துக்காக நிரபராதிகளை எந்த நல்ல கடவுளாவது தண்டிப்பாரா? ஒரு அற்ப கொடுங்கோலன் மீது பழி வாங்குவதற்காக ஒரு பெரிய நாட்டின் மீது கொள்ளை நோய்களை ஏவி விட்டு அந்நாட்டிலுள்ள தலைப் பிள்ளைகளை யெல்லாம் எந்த நல்ல கடவுளாவது கொலை புரிவாரா? சாத்தான் இக்கொடுமைகளை எகிப்தியருக்குச் செய்திருந்தால் அவனது செயல் ஜிஹோவாவின் செயல்களை விடவா இழிவானதாக இருக்கும்? இப்பேர்ப்பட்ட கடவுள் உண்மையாகவே கடவுளாக இருக்க முடியுமா?

ஆனால் எகிப்தியர்களை பாரோ ஹிம்சித்ததைவிட மிகக் கொடுமையாகவே யூதர்களையும் அவர்களுடைய கடவுள் ஹிம்சித்திருக்கிறார். பாலும் தேனும் ஒழுகும் ஒரு நாட்டை யூதர்களுக்கு அளிப்பதாக ஜிஹோவா அவர்களுக்கு வாக்குறுதியளித்தார். எகிப்து நாட்டை விட்டு விட்டு அந்த நாட்டுக்குச் செல்லும்படி யூதர்களை ஜிஹோவா தூண்டினார். வெகு விரைவில் ஜிஹோவாவின் வாக்கை நம்பியதால் ஏற்பட்ட பலனை அவர்கள் அனுபவிக்க வேண்டியதாய்

வந்தது. யூதர்களுக்கு ஜிஹோவா எகிப்திய அரசன் பாரோவைவிட மிகக்கொடிய கொடுங்கோலனாயிருந்தான். கொள்ளைநோய்களை ஏவி, கொடுமைப்படுத்தி ஆயிரக்கணக்கில் ஜிஹோவா யூதர்களைக் கொன்றார். யூதர்கள் பட்டினியினால் எலும்புந் தோலுமாகி மணற்காட்டில் வருந்திக் கொண்டிருக்கையில் அவர் வாக்களித்த பொன்னாட்டை அவர்கள் காணப்போவதில்லையென்றும் அவர்களுடைய சந்ததிகளே காண்பார்களென்றும் அவர்களுடைய ஜீவிதம் காடுகளில் கிடந்து அழியுமென்றும் அப்பொழுதுதான் தன் வாக்குறுதி உல்லங்கனம் அவர்களுக்குத் தெரியுமென்றும் ஜிஹோவா யூதர்களிடம் சொன்னார். எகிப்திலிருந்து பிரயாணமான யூதர்களில் காலம், ஜேஷுவா என்ற இரண்டு யூதர்கள் மட்டுமே கானான் நாட்டையடைந்தனர். தன் மக்களுக்குச் சுதந்தரமும் வளநாடும் அளிப்பதாக ஜிஹோவா வாக்குறுதியளித்தார். கடைசியில் அவர்களைப் பரதேசிகளாக்கி வருஷாந்தத்தில் கொலை புரிந்தார். அப்பேர்ப்பட்டவர் மெய்யாகவே கடவுளாக இருக்கமுடியுமா?

## 4

பழைய ஏற்பாட்டுக் கடவுளோ எவராலும் பிரீதி செய்ய முடியாதவராயிருந்தார். ஓயாமல் பலியிடும்படி அவர் யூதர்களைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவருடைய தாபத்தைத் தணிக்க ஆயிரக்கணக்கான கால்நடைகளின் இரத்தம் ஆறாக ஓடிற்று. அவருடைய பூசாரிகள் சதா ஆடுமாடுகளின் கழுத்தை அறுத்துக்கொண்டே இருந்தார்கள். எல்லாக்கடவுள்களையும் விட ஜிஹோவா பெரிய கலகப்பிரியனாயிருந்தார். எந்தக் காரியமும் அவர் விரும்பியபடி தான் செய்யவேண்டும். யாத்திராகமம் 2?-வது அத்தியாயத்தில் யூதப் பூசாரிகளைப் பார்த்து ஜிஹோவா பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

அதாவது "ஒரு ஆட்டுக்கடாவைக்கொன்று அதன் இரத்தத்தை எடுத்து; ஆரானின் வலக்காதின் நுனியிலும் அவரது மக்களின் வலக்கைப் பெருவிரலிலும் வலக்கால் பெருவிரலிலும் பூசி மீதத்தை பலிபீடத்தைச் சுற்றி தெளியுங்கள்" என்பதாக. அவர்கள் (யூதப்பூசாரிகள்) இரத்தத்தை இடக்காதிலோ, வேறு பெருவிரலிலோ பூசியிருந்தால் எத்தனை ஜனங்களை ஜிஹோவா கொன்றிருப்பார்

என நமக்குத் திட்டமாகக் கூறமுடியாது. நமக்குத் தெரிந்த வரையில் யூதர்களின் கடவுள் எந்த ஒரு முறையையும் அனு சரித்திருப்பதாகத் தெரியவில்லை; புஷ்ப வாசனையில் அவ ருக்குப் பெரிய வெறுப்பு. ஆனால் அவருடைய பூசாரிகள் உடல் முழுதும் இரத்தம் அணிந்திருப்பதாயும் இரத்தவாடை எங்கும் பரவியிருப்பதாயும் வேகும் மாமிசப்புகை எங்கும் நிறைந்திருப்பதாயும் கண்டால் மாத்திரம் அவரது கோபம் ஒருகால் சற்றுத்தணிவது போலிருக்கிறது.

ஓழிக்கில் சுவிசேஷத்தில்ஜிஹோவா யூதர்களைப்பார்த்து கூறியிருப்பதாவது:—''தீர்க்கதரிசி ஏதாவதுகூறி ஏமாற்றியி ருந்தால் கடவுளான நானும் தீர்க்கதரிசியை ஏமாற்றித்தான் இருக்கிறேன்''

யுட்டரோமணியர் சுவிசேஷத்தில் ஜிஹோ யூதர்களைப் பார்த்துக்கூறியிருப்பதாவது:—''உங்கள் கடவுள் யாவற்றை யும் எரிக்கும் தீ''

ஜெரீமியா சுவிசேஷத்தில் அவர் கூறியிருப்பதாவது:—

''நீ என் கோபத்தீயை எழுப்பி விட்டாய். அது எந்நா ளும் எரிந்துகொண்டே யிருக்கும்''

இசயாக சுவிசேஷத்தில் அவர் கூறியிருப்பதாவது:— ''உங்களை எதிர்ப்பவர்களுக்கு அவர்களுடைய மாமிசத் தையே இரையாகக் கொடுப்பேன். முந்திரிச்சாராயத்தைக் குடிப்பதுபோல் அவர்கள் தமது இரத்தத்தையே குடிப்பார் கள்''

சாமுவெல் சுவிசேஷத்தில் அவர் கூறியிருப்பதாவது:— ''நீ சென்று அமெலக்கை அடித்துக்கொல்லு; அவர்களு டைய உடமைகளை யெல்லாம் அழித்துவிடு; ஒன்றும் மீதம் வைக்காதே; ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளை யும் பால்குடிக்கும் சிசுக்களையும் ஆடுகளையும் மாடுகளை யும் ஒட்டகங்களையும் கழுதைகளையும் ஒன்றுகூட பாக்கி வைக்காமல் கொன்று விடு''

ஆகவே பைபில் கூறும் கடவுள் பொய்யர் என்றும் தீயர் என்றும் கோபக்காரர் என்றும் பெரிய கொலை

பாதகர் என்றும் தெரியவருகிறது. அப்பேர்ப்பட்டவர் மெய்யாகவே கடவுளாக இருக்க முடியுமா?

5

அப்பேர்ப்பட்ட கடவுளைப்பற்றிய வர்ணனை நிறைந்த ஒரு புஸ்தகம் புனிதமானதென்றும் தெய்வவாக்கென்றும் மக்கள் ஏன் நம்பவேண்டும்? காட்டுத் தெய்வத்தன்மையை அறிய நாம் காட்டாளர்களிடம் ஏன் போகவேண்டும்? நரமாமிச பட்சணியான ஒரு கடவுளை நாம் ஏன் வணங்க வேண்டும்? உதவியற்ற பெண்களும் நிரபராதிகளான குழந்தைகளும் அநியாயமாக ஹிம்சிக்கப்பட்டுக் கொல்லப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு கடவுளுக்கு நாம் ஏன் ஆலயங்கள் கட்ட வேண்டும்? ஜிஹோவா மண்ணுலகத்துக்கு வருவதாயிருந்தால் அவரை ஒருவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏன்? ஒரு மரப்பெட்டியைப் பார்த்த பாபத்துக்காக ஒரு சந்தர்ப்பத்திலே 50070 பேரை அவர் கொன்றிருக்கிறார். அப்பேர்ப்பட்டவர் உண்மையாகவே கடவுளாகவே இருக்க முடியுமா?

6

ஜிஹோவா ஒருவரே கடவுள் என்று கிறிஸ்துமதம் கூறுகிறது. எனினும் அவருக்கு ஒரு மகன் உண்டென்றும் அவரும் ஒரு கடவுள் என்றும் சொல்லப்படுகிறது. 2000-ம் வருஷங்களுக்கு முன் ஜூடேயே விவசாயிகள் சமுதாயத்தில் அந்த தேவகுமாரர் பிறந்தாராம். அவருடைய தாய் ஒரு யூதச் தச்சன் மனைவியாக இருந்தாள். அந்தக் குழந்தை எல்லாக் குழந்தைகளையும் போலவே வளர்ந்து பெரிய மனிதனாயிற்று. அந்தக் குழந்தையின் பழக்க வழக்கங்களெல்லாம் மற்ற மனிதர்களின் பழக்க வழக்கங்களைப் போன்றே இருந்தன. அவர் உண்டார்; உறங்கினார்; உடுத்தார்; வேலை செய்தார்; கொஞ்சகாலம் மதப்பிரசங்கம் செய்தார்; கடைசியில் இறந்தார். அவரைப்பார்த்தவர்கள் எல்லாம் அவர் ஒரு மனிதர் என்றே கூறினார்கள். ஆனால் பாதிரிகள் கூறுவது உண்மையானால் அவர் சர்வ வல்லமையுள்ள கடவுளாகவே இருக்க வேண்டும்.

இந்தக் கட்டத்திலே தேவ ரகசியங்களும் அற்புதங்களும் நம் முன் தோன்றுகின்றன. ஜிஹோவா கிறிஸ்து

வின் தந்தையெனக் கூறப்படுவதுடன் கிறிஸ்து தேவ ஆவியின் மகன் என்றும் கூறப்படுகிறது. யூதர்களின் கடவுளும் தேவ ஆவியும் ஒன்றே என்றும் மேற்கொண்டு கூறப்படுகிறது; ஆனால் இதற்கு கடுகத்தனையாவது ஆதாரம் காட்டப்படவில்லை. ஜிஹோவாவுக்கு மகனே இல்லையென்று யூத மதம் கண்டிப்பாக மறுப்பதினால் முன்னைய கூற்றுகள் அடியற்று விழுந்து விடுகின்றன.

கிறிஸ்து மதக் கடவுளான கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றிய விசேஷம் என்னவென்றால், அவர் கன்னிக்குப் புத்திரனாகப் பிறந்தாராம். ஆனால் கன்னிகள் பிள்ளை பெற மாட்டார்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். கன்னிகள் தாய்மாராவதும் அவர்கள் பெறும் பிள்ளைகள் எல்லாம் தெய்வங்கள் ஆவதுமில்லை. கிறிஸ்துவின் தாயார்—கன்னியாயிருந்தாள் என்பதற்கு என்ன தான் ஆதாரம் சொல்லப்பட்டாலும் சரி—அவள் வாஸ்தவத்தில் ஒரு விவாகமான பெண்ணே. ஜோஸப் என்பவர் மேரியின் கணவன் என்றும் மேரி ஜோஸப்பின் மனைவியென்றும் புதிய ஏற்பாடு முதல் பக்கத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. ஜோஸப் கிறிஸ்துவின் தந்தையென்ற நம்பிக்கையை மேரியே உறுதிப்படுத்தியிருக்கிறாள். கிறிஸ்து ஒரு நாள் ஆலயத்தில் இருப்பதைக் கண்ட போது "நானும் உன் தந்தையும் உன்னைத்தேடி வருந்துகிறோமே" என மேரியே கூறியிருக்கிறாள். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமேயே ஜோஸப்பும் மேரியும் கணவனும் மனைவியுமாக இருந்தும்—கிறிஸ்துவின் தந்தை ஜோஸப்பே என மேரி கூறியிருந்தும்—ஜிஹோவா வேறொரு கடவுளுக்குத் தந்தையாகவில்லையென்று யூதர்கள் எல்லாம் கண்டிப்பாகக் கூறியிருந்தும் கிறிஸ்து கடவுள் என்றும் அவர் தேவகுமாரர் என்றும் பாதிரிமார் கூறுகிறார்கள். அப்பேர்ப்பட்டவர் மெய்யாகவே ஒருகடவுளாக இருக்க முடியுமா?

7.

கிறிஸ்து மதப்படி ஜிஹோவா ஒரு கடவுள்; கிறிஸ்து ஒரு கடவுள்; தேவ ஆவி ஒரு கடவுள். அப்படியிருந்தும் மூன்று கடவுள்கள் இல்லையென்றும் கடவுள் ஒருவனே என்றும் சொல்லப்படுகிறது. இதுவே திரிமூர்த்தி அல்லது திரியேகத்துவ சித்தாந்தம். அந்த சித்தாந்தத்தை கத்

தோலிக்கர்கள் விருத்தி செய்தார்கள். இப்பொழுது கிறிஸ்து மதம் முழுமைக்கும் அந்த திரியேகத்துவ சித்தாந்தமே ஆதாரமாயிருக்கிறது.

அதனாசியன் கோட்பாடு பின் வருமாறு கூறுகிறது.

தந்தை, குமாரன், தேவ ஆவி ஆகிய மூன்றுக்கும் ஆதாரமாயிருக்கும் கடவுள் ஒருவரே; அவர்கள் மகிமை சமமானதே; வல்லமை அனாதியானதே. தந்தை எப்படியோ அப்படியே மகன்; அப்படியே தேவ ஆவி. தந்தை சிருஷ்டிக்கப்படாதவர்; மகன் சிருஷ்டிக்கப்படாதவர்; தேவ ஆவி சிருஷ்டிக்கப்படாதது. தந்தை அறிய முடியாதவர்; மகன் அறிய முடியாதவர்; தேவ ஆவி அறிய முடியாதது. தந்தை நித்தியன்; மகன் நித்தியன்; தேவ ஆவி நித்தியமானது. எனினும் அவை மூன்று நித்தியங்களல்லவாம்; ஒரே நித்தியமாம். மற்றும் அவை மூன்றும் சிருஷ்டிக்கப்படாதவை—அறிய முடியாதவை அல்லவாம். அதுபோலவே தந்தை சர்வசக்தியுடையவர்; மகன் சர்வ சக்தியுடையவர்; தேவ ஆவியும் சர்வசக்தியுடையது. எனினும் அவை மூன்று சர்வசக்திகளல்லவாம்; ஒரே சர்வ சக்தியாம். அப்படியே தந்தை ஒரு கடவுள்; மகன் ஒரு கடவுள்; தேவ ஆவி ஒரு கடவுள். எனினும் அவை மூன்று கடவுள்களல்லவாம்; ஒரே கடவுளாம். கிறிஸ்து மத உண்மை மூன்று கடவுள் இருப்பதாக வற்புறுத்துகிறது; ஆனால் கத்தோலிக்க மதமோ மூன்று கடவுள் இல்லை யென்றும் கடவுள் ஒருவரே என்றும் கூறுகிறது.

கடவுளைப்பற்றிய கத்தோலிக்க பாஷியம் இம்மாதிரி இருந்து வருகிறது. அதை அடிப்படையாக கொண்டுகிறிஸ்து மதம் முழுதும் (கத்தோலிக்—புராடஸ்டண்டு உள்பட) வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாஷியம் தப்பானால் கிறிஸ்து மதமே அழிந்து விடும். திரியேகதத்துவ பித்தலாட்டம் பகுத்தறிவுடைய எந்த மனிதனுக்காவது திருப்தியை அளிக்குமா? மூன்று சர்வவல்லமையுடைய கடவுளே; மூன்று நித்தியமான கடவுள்களும் உண்மையில் ஒரே கடவுளே என்பதை விடக் கேவலமான குழறுபடை வேறுண்டா? இதை விடப் பகுத்தறிவுக்குப் பொருந்தாத—மூடத்தனமானகூற்று வேறுண்டா? இப்பேர்ப்பட்ட ஆபாசங்களை ஒருவன் நம்புகிறதாயிருந்தால் அவனுக்குப் பகுத்தறிவு இருந்து என்ன பயன்? அல்லது பகுத்தறிவை காற்று வாக்கில் பறக்கவிட்

டால்தான். தெய்வ நம்பிக்கை சாத்தியமானது என்பது பொருளா? அப்பேர்ப்பட்ட கடவுள் ஒரு கடவுளாக இருக்க முடியுமா?

8

ஆனால் கடவுள் என்றால் என்ன? அந்தப் பதம் ஏதேனும் குறிப்பிட்ட ஒரு பொருளை உணர்த்துகிறதா? கடவுளுக்கு மெய்யாகவே உருவமோ உயிரோ உண்டா? கடவுள் ஒரு ஆவி என்று கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் அது என்ன? அதைப்பார்க்க முடியுமா? உணர முடியுமா? கேட்க முடியுமா? அதற்கு எடையுண்டா? அது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கியதா? இதுகாறும் அறியப்பட்டுள்ள பொருள்களில் ஆவி ஒன்றென்றால் ஆவி என்பது என்ன?

கடவுள் என்றால் என்னவென்று மீண்டும் நான் கேட்கிறேன். எபிஸ்கோப் பேலியன் என்கின்ற கிறிஸ்தவ வகுப்பார் பின் வருமாறு கூறுகிறார்கள்:—"உண்மையான உயிருள்ள கடவுள் ஒருவரே; அவர் அழிவில்லாதவர். அவருக்கு உடலுமில்லை; உறுப்புகளுமில்லை; உணர்ச்சியுமில்லை; உடலும் உறுப்பும் உயிரும் இல்லாத சூனியமே."

கடவுள் தன்மையை விளக்கும் புராடஸ்டண்டு மதமோ கடவுள் உண்மையையே மறுக்கிறது. உடலுமில்லை, உறுப்புமில்லை, உயிருமில்லை யென்பதற்கு, தலையில்லை, மூளையில்லை, அறிவில்லை, விருப்பில்லை, வெறுப்பில்லை, எதுவுமே இல்லை, ஆனால் கடவுள் உண்டு; அவர் நித்தியமானவன் என்பதே பொருள். ஆனால் நித்தியமானதுஎது? நித்தியமான சூனியமே.

உண்மையென்னவெனில் ஆவிரூபமுள்ள ஒன்றை மக்களால் உணரவே முடியாது. சரீரத்தோடு சம்மந்தப்படாத உயிரைப்பற்றி அறியவே முடியாது. இயங்குவனவெல்லாம் ஜடசம்மந்தம் பெற்றவைகளாகவே இருக்க வேண்டும் பொரு

ளில்லாத இடத்து ஆவியிருக்க முடியாதென்று இயற்கை கூறுகிறது. எனவே கடவுளுக்கு உடல் இல்லை, உறுப்பில்லை, உயிரில்லையென்று கூறுகிறவர்கள் அவர்கள் அறியாத ஏதோ ஒன்றைப்பற்றித்தான் பேசுகிறார்களே ஒழிய அதைப்பற்றி விளங்கிக் கொண்டவர்கள் அல்ல. ஆகவே கடவுள் ஒன்றா ஏதேனுமொன்றாக இருக்க வேண்டும், அல்லது சூனியமாக இருக்க வேண்டும். கடவுள் ஒரு பொருளானால் அவருக்கு உடல் இருக்க வேண்டும்; ஜடசம்மந்தம் பெற்றவராயிருக்க வேண்டும். கடவுள் சிந்தனை செய்யச் சக்தியுடையவராயிருந்தால் அவருக்கு மூளையிருக்க வேண்டும். அவர் உணர்ச்சியுடையவராயிருந்தால் அவருக்கு நரம்புகள் இருக்கவேண்டும். மூளையில்லாவிடத்து சிந்தனா சக்தியோ அறிவோ இருக்க முடியாது; நரம்பில்லாத இடத்து உணர்ச்சியோ மனவெழுச்சியோ இருக்க முடியாது. இரைப்பையில்லாத இடத்து மூளையும் நரம்புக்கூடும் இல்லை. உயிருடையவைகளுக்குத் தீனி இன்றியமையாதது. இதை யாரும் மறுக்கமுடியாது. நாம் அறிந்தவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டே விவாதம் செய்ய முடியும். ஆனால் உடலும் மூளையும் நரம்புக்கூடும் ஜீரணக்கருவிகளும் உடைய ஒன்றை கடவுள் என எவ்வாறு கூறுவது? மனித உருவமோ அல்லது வேறு உருவமோ உடைய ஒன்றுக்கு சர்வ வல்லமையும் சர்வஞானமும் எப்படியிருக்க முடியும்?

கடவுள் சிந்திக்கிறார்; திட்டங்கள் போடுகிறார்; தன் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றிவைக்கிறார்; அவர் பொறாமையுடையார்; அன்புடையார்; கருணையுடையார் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இவையாவும் உண்மையானால் அவர் மனித குணமுடையவராகவே தோற்றப்படுகிறார்; எனவே அவர் நாமரூபங்களும் கருவி கரணங்களும் உடைய ஒரு மனிதனாகவே இருக்க வேண்டும். ஆனால் கடவுள் ஒரு மனிதரானால் அவர் எப்படி நித்தியனாக இருக்க முடியும்? நித்தியனாக மனிதன் இருக்கவே முடியாது. ஒரு தம்பிடியால் எப்படி கோடிரூபாய் அடங்கியிருக்க முடியாதோ அப்படியே ஒரு மனிதனிடத்தில் நித்தியத்துவம் அடங்கியிருக்க முடியாது. தன்னைவிட மேலான ஒன்றை கற்பனை செய்ய முடியாதமனிதன் கடவுளும் மனித உருவமுடையவர் என நம்பிக்கொள்கிறான். காட்டாளன் கடவுளின் குணங்களை நாகரீகமடைந்த மனிதன் பெருக்கிக் காட்டி கடவுள் நித்தியமானவர் என்றும் நாமரூப கருவி

கரணங்கள் உடையவர் என்றும் கற்பனை செய்துகொள்ளு கிறான்.

## பிரபஞ்ச அமைப்பு.

நாமரூப கருவிகரணங்களையுடைய ஒரு கடவுள் இருக்க முடியாதென்று வானசாஸ்திர உண்மைகளால் நன்கு விளங்குகிறது. பிரபஞ்ச அமைப்பைப்பற்றி சற்று கவனிப்போம். நாம் வசிக்கும் பூமியின் குறுக்களவு 8000 மைல். நமது சூரியன் ஒரு அக்கினிக்கோளம். அதன் குறுக்களவு 866,200 மைல்; சுற்றளவு 25 லக்ஷம் மைல். பூமியைவிடச் சூரியன் 1,305,000 மடங்கு பெரியது. சூரிய மண்டலத்தைச் சேர்ந்த அநேக கிரகங்கள் பூமியைவிடப் பலமடங்கு பெரியவை. வியந்தன் என்னும் கிரகம் 59 மடங்கும், சனி 8486 மடங்கும் பூமியைவிடப் பெரியவை. வியாழனைப்போன்ற ஒரு கோளத்தை யுண்டுபண்ண வேண்டுமானால் 1,389 மண்ணுலகங்கள் வேண்டும். சூரியன் பூமியிலிருந்து 93,000,000 மைல். விமந்தனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம் 2,792,000,000 மைல். விமந்த கிரகத்தின் அகலம் 5,584,000,000 மைல். ஒரு நிமிஷத்துக்கு ஒரு மைல் வேகத்தில் ஓடும் ரயில் இரவும் பகலும் விடாமல் ஓடினால் பூமியிலிருந்து சூரியனை அடைய 176 வருஷம் பிடிக்கும். அதே வண்டி அதே வேகத்தில் ஓடினால் சூரியனிலிருந்து விமந்தனையடைய 5280 வருஷம் பிடிக்கும்.

எனினும் எல்லையும் கரையுமில்லா மகாசமுத்திரத்தில் இந்த சூரியமண்டலம் ஒரு நுரைத்திவலையாகவே இருந்து வருகிறது. இந்த கிரகங்களுக்கு எல்லையற்ற பிரபஞ்சம் இருக்கிறது. சூரியனுடைய எடைக்கு சமன் எடைபோட வேண்டுமானால் சூரிய மண்டலத்தில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றனவோ அவைகளைவிட 700 மடங்கு அதிகமான கிரகங்கள் வேண்டும். ஆனால் ஆர்க்டூரஸ் என்ற நட்சத்திரம் 1,500,000 சூரியன்களின் பரிமாணம் கொண்டதாயிருக்கிறது. 93,000,000 மைல் தூரத்தில் சூரியன் பூமிக்கு ஒளியளிக்கிறான். ஆனால் சூரியனைவிட 11,500,000 மைல் அப்பாலிருக்கும் ஆர்க்ரூடஸ் நட்சத்திரம் சூரிய ஒளியோடு போட்டிபோடுகிறது. சீரியஸ் என்ற நாய் வடிவான நட்சத்திரம் 58 ஆயிரம் லக்ஷ கோடிமைல் தூரத்திலிருந்து பூமியின் மீது ஒளியை வீசுகிறது. வடதிசையிலிருக்கும் பொளாரியஸ் என்ற நட்சத்திரம் 210 ஆயிரம் லக்ஷகோடி

மைல் தூரத்திலிருந்து தன் பாலொளியைப் பூமி மீது வீசுகிறது. ஒரு ஓடும் ரயில் சூரியனை அடைய 176 வருஷம் பிடிக்கும். சூரியனிலிருந்து 2,378,000 மைல் தூரத்துக்கு அப்பாலிருக்கும் இந்த பொளாரியஸ் நட்சத்திரத்தையடைய எவ்வளவு காலம் பிடிக்கும்?

வான வெளியிலே மேகங்கள் இல்லாத தெளிவான இரவில், வான மண்டலம் முழுதும் லக்ஷோபலக்ஷம் நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். எனினும் பூமிக்கு மிகவும் சமீபத்திலிருக்கும் ஆல்பா செண்டாரி என்ற நட்சத்திரத்துக்கும் பூமிக்கும் 2000 கோடிமைல்களுக்குமேல் தூரமிருப்பதைப்பற்றி நாம் யாராவது சிந்திப்பதுண்டா? அந்த நட்சத்திரத்தின் ஒளி ஒரு விநாடிக்கு 186,000 மைல் வேகத்தில் பாய்ந்தால் பூமியையடைய மூன்றரை வருஷம் பிடிக்குமாம். நாம் காணும் நட்சத்திரங்கள் எல்லாம் உண்மையில் எரிந்துகொண்டிருக்கும் சூரியன்களே. மால்கிதி மண்டலத்தில் (Milky way) மட்டும் 2கோடி நட்சத்திரங்கள் சிதறிக் கிடக்கின்றன. உள்ளத்தாலும் உன்ன முடியாத அவ்வளவு தூரத்தில் பரஸ்பரத் தொடர்பில்லாமல் பிரிக்கப்பட்டு கூட்டங் கூட்டமாகவும் கும்பல் கும்பலாகவும் கொத்தாகவும் வானமண்டலம் முழுவதும் அவை பரவிக் கிடப்பதினால் எல்லைகாண முடியாத பரவெளி ஜோதி மயமாக இருந்து கொண்டு இருக்கிறது. அத்தகைய பிரபஞ்சத்தின் முன்னிலையில்—கோடிக்கணக்கான பெரிய சிறிய சூரியர்களும் உலகங்களும் மனத்தாலும் அளவிட முடியாத அவ்வளவு வேகத்தில் சுழன்று கொண்டிருக்கும் பிரபஞ்சத்தின் முன்—நமது சிறுபூமி கேவலம் ஒரு தூளணுவாகவே இருக்கிறது.

அப்பேர்ப்பட்ட ஒரு பிரபஞ்சத்துக்கு நாமரூப கருவி காரணங்களையுடைய ஒரு கடவுள் எப்படித்தலைவராக இருக்க முடியும்? ஏககாலத்தில் அந்தப் பிரபஞ்சம் முழுமையிலும் அவருக்கு எப்படி இயங்க முடியும்? கடவுள் 10 லக்ஷம் மைல் உயரமும் எல்லாக் கடல்களையும் ஒன்று சேர்த்தால் எவ்வளவு பரிமாண மிருக்குமோ அவ்வளவு பரிமாணமுள்ள மூளையும் இருந்தால் கூட அகண்ட கோடிசூரியர்களும் உலகங்களும் நிறைந்த பிரபஞ்சத்திலே அவர் எம்மாத்திரம்? அப்பேர்ப்பட்டவர் மெய்யாகவே ஒரு கடவுளாக இருக்க முடியுமா?

# 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை.'

('சித்திர புத்திரன்' எழுதுவது)

———):0:(———

ஏதாவது விஷயத்தைப்பற்றிப் பேசுகிறபோது முழுதும் உண்மையாயிருக்காது என்று சந்தேகப்படுகிறகாலத்தில் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி சொல்வதுண்டு. அது எப்பொழுது ஏற்பட்டது, எதற்காக ஏற்பட்டது என்கிற விபரம் அநேகமாய் நமது தமிழ் மக்களுக்குத் தெரியாதென்றே நினைக்கிறேன். தெரியாதென்று நினைப்பதால் அதைப்பற்றி நான் கண்டு பிடித்த முடிவைச் சொல்லுகிறேன்.

'ஐந்துக்கிரண்டு பழுதில்லை' யென்பதானது ஐந்து விஷயம் சொன்னால் அதில் இரண்டாவது பொருத்தமாயிருக்கும், அப்படியிருந்தாலே போதும் என்கிற கருத்துக்கொண்டே இப்பழமொழி வழங்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது என்று பார்ப்போமானால் ஆரியர்கள் நமது நாட்டில் வந்து பொய்யும் புரட்டும் புளுகஆரம்பித்த காலத்தில் அப்புரட்டுகளை யாராவது கண்டுபிடித்து கேட்க ஆரம்பித்தால் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல்' அதாவது முன் சொன்னதுபோல் ஐந்தில் இரண்டு விஷயங்கள் நிஜமாயிருந்தாலே போதுமென்று அதை நம்ப வேண்டியதுதான் என்று சொல்லி ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தினார்கள். அந்தப் பழமொழியின் ஆதாரத்தைக் கொண்டுதான் ஜனங்கள் இப்பொழுதும் சாஸ்திரம், புராணம், ஜாதகம், ஆரூடம், சகுனம், சாந்தி, ஓமம், யாகம், சாமியாடி வேண்டுதலை அல்லது பிரார்த்தனை, அருள்வாக்கு என்பதை போன்ற மூடக்கொள்கைகளெல்லாம் நாட்டில் பரவலாயின. ஏனெனில் இவைகளில் எவ்வளவு பொய்யாய்ப் போய்விட்டாலும் அதை நம்பிக்கெட்ட மூடர்கள் பார்ப்பனர்களை சமாதானம் கேட்க ஆரம்பித்தால், அதனால் பிழைக்கும் அயோக்கியக் கூட்டத்தார் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல் இருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டுமேயொழிய ஒவ்வொன்றையும் பரிசோதிப்பது நாஸ்திகத் தன்மையாகிவிடும், கடவுளிடத்தில் நம்பிக்கையற்ற தன்மையாகி விடும்' என்று சொல்லி ஏமாற்றி விடுவார்கள்.

ஆனால் அவற்றுள் ஐந்து என்ற எண்ணிக்கையும் இரண்டு என்கிற எண்ணிக்கையும் எப்படி குறிப்பாய் வந்தது, வேறு எண்களைச் சொல்லக் கூடாதா என்று சிலர் கேட்கக்கூடும். இம்மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்வது அனாவசியமாகும். ஏனெனில் ஏதாவது இரண்டு எண்களைச் சொல்லித்தானாகவேண்டும். அப்படி சொல்லும்போது இந்த இரண்டு எண்களை மட்டும் சொல்லக்கூடாது என்பதற்கு யாதொரு நிபந்தனையும் இல்லை. ஆனாலும் இந்த இரண்டு எண்களுக்கு குறிப்பான சமாதானம் இல்லாமல் போகவுமில்லை. அதைச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேளுங்கள். ஆனால் அதை நம்பியே தீரவேண்டுமென்று நான் உங்களைக் கட்டாயப் படுத்தவில்லை. உங்களுக்குச் சரியென்று தோன்றினால் ஒப்புக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் வேறு சமாதானம் கிடைக்கும் வரை இதை அனாமத்தில் வைத்திருங்கள்.

அதாவது, பார்ப்பன பாஷையில் ஒரு ஸ்தோத்திர ஸ்லோகமுண்டு. என்னவென்றால், "அகல்யா, துரோபதி, சீதா, தாரா, மண்டோதரி, ஸ்மிருதா, பஞ்சகன்யாஸ்மரே நித்யம் மஹா பாதக நாசனம்." இதன் கருத்து அகல்யை, துரோபதை, சீதை, தாரை, மண்டோதரி ஆகிய ஐந்து கன்னிகைகளை தினம் நினைத்தால் மஹா பாதகமெல்லாம் நாசமாய்விடும் என்பதே. இதில் ஏற்பட்ட விவகாரத்திற்காகத்தான் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்கிற பழமொழி உண்டாக்கப்பட்டது. விவகாரத்தின் தன்மையாவது:—

இதை கோபமில்லாமல் பகுத்தறிவோடுகேட்கவேண்டும். ஏனென்றால், கோபம் வந்தால் பார்ப்பான் ஏமாற்றி விடுவான். கோபமில்லாவிட்டால்தான் அதிலிருக்கும் ரகசியம் விளங்கும். நான்கிளப்பப்போகும் விவாதம் இந்தஸ்லோகத்தைஎந்தப் பார்ப்பான் எழுதினானோ அந்தப்பார்ப்பான் எழுதி வைத்த சங்கதியைத்தான் சொல்லப்போகிறேன். ஆதலால் நான் என் உத்தேசப்படி சொல்லப் போவதாக நினைத்து ஏமாந்து போகாதீர்கள். இதில் கண்டிருப்பது வாஸ்தவமா இல்லையா என்று ஒவ்வொரு பார்ப்பானையும் கேளுங்கள். வாஸ்தவமல்லவென்று சொன்னால் என்னைக் கேளுங்கள். முதலாவது அந்த ஸ்லோகத்தில் மேல்கண்ட ஐந்து பெண்களையும் கன்னிகைகள் என்று குறிப்பிட்டிருக்கிறது. கன்னிகை என்றால் கலவி அறியாதவள்.

அதாவது புருஷர்கள் சாவகாசம் தொடங்காதவள், கல்யாண மில்லாதவள் என்பது பொருள். ஆகையால் அந்த ஸ்லோகம் முன்னுக்குப்பின் முரணானது என்று சொல்லுவேன்.

ஒரு சமயம் பார்ப்பனர்கள் இதற்கு இந்த ஸ்லோகத்தில் ஷை பெண்களைக் குறிப்பிட்டு நினைக்கும்படி சொன்னதின் கருத்து கன்னித் தன்மையை உத்தேசித்ததல்ல அவர்களு டைய கற்புத்தன்மையைப்பற்றி என்று சமாதானமாகச்சொல்ல வருவார்களானால் அதைப்பற்றி சற்று யோசிப்போம்.

இந்த ஐந்து பெண்களையும் நான் 1. தாரை, 2. அகலிகை, 3. துரௌபதை, 4. சீதை, 5. மண்டோதரி என்கிற வரிசையில் எடுத்துக்கொள்ளுகிறேன்.

முதலாவது தாரை. தாரை என்பவள் தேவகுருவாகிய பிரகஸ்பதியினுடைய பெண்சாதி. இந்தம்மாளைப்பற்றிய விஷ யம் அறிவதற்கு கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு காதம் காத மாய் ஊர்ப்பயணம் போக வேண்டியதில்லை. இன்றைக்கும் தெருத் தெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும் நிர்வாணமாய் நின்று கொண்டு சந்திரனுக்கு எண்ணெய் தேய்ப் பதுமான சத்காலட்சேபத்தை தினம் தினம் பார்த்து வருகி றோம். தாரையம்மாள் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டு பேருக்கும் சாபமிட்டதும், இவர்கள் இரண்டு பேருக்குமாக பிறந்த குழந்தை புதன் என்பவன் இருப்பதும் மேற்படி பார்ப் பனர்கள் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே குருவின் யோக்கியதை, குருபத்தினியின் யோக் கியதை, சிஷ்யனின் யோக்கியதை, ஆச்சிரமத்தின் யோக்கியதை ஆரிய நாகரீகத்தின் யோக்கியதை ஆகிய இவ்வளவுக்கும் தாரை யம்மாள் உதாரணமாக விளங்குகிறாள். இதையெல்லாம் விட கற்பின் லக்ஷணத்திற்கும் இது ஓர் அரிய இலக்கியமாய் விளங்குகின்றது.

இரண்டாவது அகலிகை அம்மாள் விஷயம். அகலிகை அம்மாள் என்பவள் கௌதம முனிவர் என்கின்ற ஒரு ரிஷியின் பெண்டாட்டி. தெய்வ ராஜனான இந்திரன் இந்த அம்மாள் மேல் ஆசைப்பட்டு மாறுவேஷம் பூண்டு வீட்டிற்குள் நுழைந்த தாகவும் பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்து கொண்டு இரண்டுபேரும் சுகித்ததாகவும் ரிஷி இந்த விஷயம்

தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும் அத்தண்டனையால் இந்திரனுக்கு சரீரமெல்லாம் பெண் குறியாகவும் அகலிகை கல்லாகவும் ஆய்விட்டதாகவும் பார்ப்பன சாஸ்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில்போகின்ற சாஸ்திரங்கள் சொல்லவில்லை. ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படுவதாகிய பாரதம், இராமாயணம் முதலியவைகளில்தான் இந்த உண்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் தேவர்களின் அரசனின் யோக்கியதையும், ரிஷி பத்தினிகளின் யோக்கியதையும் விளங்குகின்றது.

மூன்றாவது, துரௌபதையம்மன் சங்கதி. இந்தம்மாள் முதலில் ஒரு புருஷனை மாத்திரம் கட்டிக்கொண்டு பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டியாக இருந்து வந்திருக்கிறாள். ஐந்துபேரிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனையும் மனதில் நினைத்து நினைத்து வருந்தியிருக்கின்றாள் என்பதை தானே ஒப்புக்கொண்டதல்லாமல் உலகத்தின் பெண்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டுமானால் ஆண்மக்களே இருக்கக்கூடாது என்று தீர்ப்புங் கூறிவிட்டாள். இதனால் அக்காலக் கற்புக்கு லக்ஷணம் புருஷனும், மாமியாரும் யாரிடம் போகும்படி சொன்னாலும் போய்த்தான் ஆகவேண்டுமென்பதும், அதுவும் கற்பில் சேர்ந்ததுதான் என்பதும் பிறகு தன்னிஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதுவும் கற்புடன் சேர்ந்ததுதான் என்பதும் அக்கால வழக்கத்தில் இருந்ததாய் விளங்குகின்றது. ஆகவே ஐந்து கன்னிகைகளில் மூன்றுபேர் சங்கதி இப்படியிருக்கின்றதே என்று கேட்கப்படும் கேள்விகளுக்குத்தான் பார்ப்பனர்கள் ஐந்துக்கு இரண்டு பழுதில்லை என்று சொல்ல அதிலிருந்து இந்தப் பழமொழி ஏற்பட்டது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்றமில்லையா என்று பார்த்தால் அதிலும் ஒன்றைக் கழிக்கவேண்டியதாகத்தான் இருக்கின்றது. அடியோடு கழிக்காவிட்டாலும் சந்தேகத்திலாவது வைத்துத் தீரவேண்டியதாகத்தானிருக்கிறது.

நாலாவதான சீதையம்மாள் சங்கதியைப் பார்த்தால் முன் சொன்ன கதைகளின்படிக்கு அவ்வளவு இல்லாவிட்டாலும் உத்தம ஸ்திரீ என்றோ முழுதும் பரிசுத்தமானவளென்றோ கற்புக்கரசியென்றோ சொல்வதற்கில்லை. குண விசேஷத்தைப் பற்றியோ வென்றால், மாயமானைத் துரத்திக்கொண்டு ராமர்

போனகாலத்தில் வெகு நேரம்வரை திரும்பிவராதது கண்டு புருஷனைப் போய்ப் பார்த்து வரும்படி சீதை லக்ஷ்மணனுக்குச் சொல்ல லக்ஷ்மணன் 'போகவேண்டிய அவசியமில்லை. ராமர் எப்படியும் திரும்பிவருவார்' என்று சொன்னதற்கு 'அண்ணன் செத்தால் என்னைக் கைப்பற்றலாம் என்று பார்க்கின்றாயா' என்றுசொன்னதிலிருந்தே லக்ஷ்மணனிடம்பழகிய சீதைக்குப் போதிய அறிவும் உயர் குணமும் விஷயத்தை அறியும் சக்தியும் இல்லையென்கின்ற தத்துவமும் நன்றாய் விளங்குகின்றது. தவிர சீதையிடம் வெகுகாலம் நன்றாய்ப் பழகிய அவள் புருஷனாகிய ராமனும் பலதடவை சீதையின் கற்பில் சந்தேகப்பட்டிருக்கிறான். அதாவது ராவணனைக் கொன்றபின் முதல் முதல் சீதையிடம் ஒரு தடவை சந்தேகப் பட்டபோது சீதையிடம் என்ன சொல்லுகின்றான் என்றால் "ஏ சீதை! நான் உன்மேல் ஆசைப்பட்டு உன்னை மீட்டுக் கொண்டு போவதற்காக ராவணனிடம் யுத்தம் செய்யவில்லை. பின் என்னவென்று கேட்பாயானால் ஒருவன் பெண்சாதியை மற்றொருவன் அடித்துக்கொண்டுபோய் விட்டால் அவனைச் சும்மா விட்டுவிடுவது வீரனுக்கு அழகாகுமா என்கின்ற ரோசத்தின்மேல் தான் சண்டை போட்டு அவனைக் கொன்றேன். மற்றபடி ஒரு துஷ்டன் வீட்டில் அதுவும் அவனுடைய அதிகாரத்திற்கும் பலத்திற்கும் கட்டுப்பட்டு 10 மாதம் வசித்த தன் பெண்சாதியை சுயமரியாதையுள்ள எவனாவது மறுபடியும் சேர்த்துக் கொள்வானா?' என்று சொன்னதோடல்லாமல் "சகல வசத்திலும் அவனுடைய சுவாதீனத்திலிருந்த நீ அவனுக்கு வசப்படாமலிருந்திருக்க முடியுமா? ஆதலால் நீ எங்கே வேண்டுமானாலும் உன்னிஷ்டப்படி போகலாம். உன்னை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். கோபத்தால் சொல்லவில்லை. நெடுநேரம் ஆலோசித்து செய்த முடிவு இது" என்று சொன்னான்.

(இந்த இடத்தில் ராமன் உலக அபவாதத்திற்குக் கட்டுப்பட்டு இப்படி சொல்லவில்லை. தானே சந்தேகப்பட்டு ஒருவித முடிவு செய்து கொண்டு சொல்லுகிறான் என்றுதான் அர்த்தம்.) அதோடு 'பத்துமாதம் எதிரி வீட்டில் வசித்த நீ' என்பதால் இதுவரை உயிர் வைத்திருந்தாயே என்கின்ற கருத்தும்தொக்கியிருக்கின்றது.

இதற்கு சீதை சொல்லும் பதில்என்னவென்றால்:—

"ஏ ராமா நீ சொல்வது உண்மை? அதற்கு நான் என்ன செய்யக்கூடும்? நானோ ஒரு பெண். ஒண்டியாயும் அனாதை

யாயும் இருந்தவள். ராவணனோ ராக்ஷசன். அளவற்ற பலசாலி. என்னால் கூடியவரை தடுத்துப்பார்த்தேன். எனக்கு எள்ளளவாவது அவனுடன் போகவேண்டும் என்கின்ற ஆசையிருந்ததா? விதியை நோகவேண்டியதே தவிர என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது. என் தேகம்தான் பிறருக்கு வயப்பட்டதே ஒழிய என் ஹிருதயம் அப்பொழுதும் இப்பொழுதும் எப்பொழுதும் உன்னிடத்திலேயே இருக்கின்றது. சுதந்திரமற்ற நான் என்ன செய்ய முடியும்? அனுமானை அனுப்பி நான் இருக்குமிடத்தையும் ஸ்திதியையும் அறிந்துவரச் சொன்னதின் மூலம், நான் லங்கையில் ராவணனுடைய வீட்டில் இருப்பதாகத்தெரிந்தவுடனே என்னை என் தள்ளிவிடவில்லை'' என்று தான் சொன்னாள். (இது வால்மீக ராமாயணம் யுத்தகாண்டம் 117, 118-வது சருக்கங்களில் காணப்படுவது) இந்த இடத்தில் ராமன் சீதையைப் பார்த்து 'நீ கற்பழிந்துவிட்டாய் என்று நான் தீர்மானித்து விட்டேன்' என்று வெளிப்படையாய் சொல்லிக் காட்டியதற்கு சீதை ஏன் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று தைரியமாய் சொல்லியிருக்கக்கூடாது. என்கின்ற கேள்விக்கு பதில் இல்லை. அதோடு 'என் சரீரம் அவன் வயப்பட்டு விட்டது. ஆனால் அப்போதும் மனம் உன்னிடம் தான் இருந்தது. விதியை நோகவேண்டுமே யொழிய என்னை நோகக்கூடாது. ராவணன் வீட்டில் இருந்ததையும் என் ஸ்திதியையும் அனுமான் பார்த்துவிட்டு வந்து சொல்லி இருப்பானே. அப்போதே ஏன் என்னை தள்ளிவிட்டதாகச் சொல்லி அனுப்பவில்லை' என்பதாக வெல்லாம் சொல்லுவதினால் விஷயம் சந்தேகத்திற்காவது இடமுண்டாகின்றதா இல்லையா என்பதை யோசித்துப்பாருங்கள். ஒரு சமயம் இராவணன் மீது அதிகமான பழியைச் சுமத்த வால்மீகர் வேண்டுமென்றே இப்படி எழுதி இருக்கக்கூடும் என்று சொல்வதானால் அது வேறு விஷயம். என்னவென்றால் அது ராவணன் சங்கதியைப்பற்றி பேசும்போது கவனிக்கவேண்டிய விஷயம்.

இதுதவிர, மற்றொரு தடவை வண்ணான் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு கொஞ்சங்கூட முன் பின் யோசிக்காமல் திடீரென்று லக்ஷ்மணனை விட்டு சீதையை நடுக்காட்டில் கொண்டுபோய் விட்டு வந்ததும், அங்கு சீதை தன் கற்பைப் பற்றி யார் என்ன சொல்லிவிடப்போகிறார்களோ எனப்பயந்து ''லக்ஷ்மணா இதோபார், நான் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறேன்'' என்றுசொன்னதும், காட்டில் இரட்டைப் பிள்ளைபெற்றதாக ஒரு ராமாயணத்திலும், தர்ப்பையைக் கிள்ளிப்போட்டு

வால்மீகி ஒருபிள்ளையை உண்டாக்கினார் என்று மற்றொரு ராமாயணத்திலும் சொல்லப்பட்டாலும் இந்த பிள்ளைகளை ராமன் ஒப்புக்கொள்ளாமல் வால்மீகி முதலிய எவ்வளவோ பெரிய தவ சிரேஷ்டர்கள் என்போர்கள் பிரமாணம் செய்தும் ஒப்புக்கொள்ளாமல் மறுபடியும் நெருப்பில் இறங்கும்படி சொன்னதும் அதற்கு சீதை கட்டுப்படாமல் உலக அபவாதத்தையோ அல்லது ராமனுடைய சந்தேகத்தையோ நிவர்த்தி செய்ய வேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியைப் பிளக்கச் செய்து பூமியில் இறங்கி மறைந்து விட்டாள் என்றும் எழுதப் பட்டிருக்கிறது. இன்னமும் என்னென்னமோ இருந்தாலும் எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே சீதையின் விஷயமானது சந்தேகப்படுவதற்கில்லா மல் போகவில்லை என்பதோடு சீதையின் லக்ஷ்மித் தன்மை யும், ராமனின் விஷ்ணுத் தன்மையும் எப்படிப்பட்டதென்று விளக்கவும், ஆரியர் பழக்க வழக்கங்களையும் அக்காலத்திய ஆண்பெண்கள் வாழ்க்கை நிலைமையையும் வெளியாக்கவும் உதவுகின்றது.

கடைசியாக மீதி இருப்பது ஐந்தாவதான மண்டோதரி அம்மாள். இந்தம்மாள்விஷயத்தில் ஒருதகராறையும் காணோம். கம்ப ராமாயணத்தில், புருஷன் பிரிந்தஉடன் செத்து விட்டான் என்கின்ற சங்கதி தெரிந்து அழுது உயிர் விட்டு விட்டதாகக் காணப்படுகின்றது. தவிரவும் செத்துப்போன ராவணனைப் பார்த்து அழும்போது சீதை குலத்திலாவது ரூபத்திலாவது குணத்திலாவது சாமர்த்தியத்திலாவது என்னை விட சிறந்த வளா என்று மாத்திரம் கேட்டிருக்கின்றாள். இது சீதையின் குணத்தை 10 மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்ப தால் இதில் மண்டோதரி பேரில் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சீதையின் குணம்தான் வெளியாக்கப் பட்டதாக வைத் துக் கொள்ளவேண்டும்.

ஆதலால் மண்டோதரியின்பால் மாத்திரம் குற்றம் சொல்ல இடமில்லை. கற்புள்ள பெண் என்றே சொல்லலாம். ஆனால், இதை திராவிட நாகரீகத்துக்கும் திராவிடச் சிறப்புக் கும் இலக்கியமாக வைத்துக்கொள்ளலாம்.

பொதுவாக பஞ்ச கன்னிகைகளின் யோக்கியதையைப் பார்க்கின்ற போதும், கற்பு இலக்கணங்களைப் பார்க்கின்ற

போதும், குரு, அரசன், ரிஷி, கடவுள் என்பவர்களைப் பார்க்கின்றபோதும் நன்றாய் கவனித்தால் இதன் ஆபாசங்கள் விளங்குவதோடு ஐந்துக்கு இரண்டாவது சுத்தமாய் நேர்கின்றதா என்பது வெளியாகும்.

முதலாவது விஷயம், குருபத்தினியின் சங்கதியையும் சிஷ்யனின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இரண்டாவது விஷயம் தேவர்களுக்கெல்லாம் அரசனாயிருப்பவன் யோக்கியதையையும் ரிஷிபத்தினியின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இந்த இரண்டு விஷயமும் புருஷர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பதையாவது காட்டிற்று. மூன்றாவது விஷயமோ புருஷனும் ஒப்புக்கொண்டான், மாமியும் ஒப்புக்கொண்டாள், உலகமும் ஒப்புக்கொண்டது என்பதைக்காட்டிற்று. நாலாவது விஷயம், அவதாரங்கள் என்பதின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று

ஐந்தாவது, இராக்ஷசர்கள் என்றும் ராக்ஷசஸ்திரீகள் என்றும் ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்களை சொல்லுகின்றார்கள்—சொல்லி வந்திருக்கின்றார்கள் என்பதையும் ஒரு திராவிடப் பெண்ணின் கற்பின் நிழலுக்குள் ஆரியர்கள் எப்படி வந்து கலந்து கொள்ளுகின்றார்கள் என்பதையும் வெளியாக்கிற்று. இந்தப் பழமொழி, ஒன்று உலகத்தை ஏமாற்றச் செய்திருக்க வேண்டும்; அல்லது இது அவர்களின் பழக்க வழக்கமாயிருக்க வேண்டும். ஆகவே ஐந்துக்கு இரண்டுகூட அவர்கள் சொற்களில் உண்மையில்லை என்பதையும், ஏதாவது உண்மையிருந்தால் அதுவும் நம்முடைய விஷயங்களில்தான் என்பதையும் இந்த வியாசத்தினால் வெளிப்படுத்துகின்றேன்.

இப்பொழுது எப்படி அவர்கள் அக்கிரமங்களை மறைத்துக்கொண்டும், பெருமையாய் பிரசாரம் செய்து கொண்டும், நம்முடைய யோக்கியமான காரியங்களைக் குற்றம் சொல்லிக் கொண்டும், அதற்கு நம்மவர்களையே கூலிக்கமர்த்திக்கொண்டும் வேலை செய்து வருகிறார்களோ இதுபோல் தான் இந்த பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்கள் முன் காலத்திலும் செய்து வந்திருக்கின்றார்கள் என்பதோடு, நம்முடைய பாமர ஜனங்கள் இவர்களை அப்போதும் இப்போதும் நம்பி ஏமாந்து வருகிறார்கள் என்பதும் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்னும் வியாசத்தால் வெளியாக்கப்பட்டது.

# பகுத்தறிவுக்குத் தடை.

(டாக்டர் சி. எல். டி. அவாயின்)

இந்தியாவில் பகுத்தறிவைப் பரவச் செய்ய வேண்டுமென்றால் ஒருவன் திடசிந்தையும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் சகிப்புத் தன்மையும் பெற்றிருத்தல் வேண்டும். ஏன் அவ்வாறு ஒருவன் இத்தகைய குணங்களைப் பெற்றிருக்க வேண்டுமென்றால் சாதாரணமாக ஒருவன் வெளியில் இறங்கி வேலை செய்யும்போது அவன் எதிர்த்துப்போராட வேண்டிய பிரத்தியக்ஷக்காரியங்களைக் கொண்டே சொல்ல வேண்டியிருக்கிறது. பலதிறப்பட்ட மதங்களும், வினோதமான பழக்கவழக்கங்களும், குறுகிய மனப்பான்மையும், பிறர் கையை எதிர்பார்த்திருக்கும் தன்மையும், வறுமையும், அறியாமையும், கல்வியறிவில்லாத குறையும், இந்தியாவை இந்நிலைமைக்கு கொண்டுவந்து விட்டதோடு பகுத்தறிவு வளர்ச்சிக்குப் பெரிய முட்டுக்கட்டையாயுமிருந்து வருகின்றன. பல்வேறு மதக்கோட்பாடுகளிடத்தில் மக்களுக்குள்ள குருட்டு நம்பிக்கையும், மதத்தைப்பற்றிய சித்தப்பிரமையும், மதத்தலைவர்களின் செல்வாக்கும் பகுத்தறிவுக்கு பெருத்த தடையாக இருந்து வருகின்றன. இந்தியாவில் ஒருவன் தனது நித்திய வாழ்க்கையில் செய்ய வேண்டிய காரியங்களில் மதத்திற்காக ஏதாவது செய்துதான் ஆக வேண்டும் எனக் கருதிவருவதோடு மதத்தலைவர்கள்—குருக்கள் என்பவர்களுடைய உபதேசத்தை—சொல்லை தான் புறக்கணிப்பதினால்—உதறித்தள்ளுவதினால் தனக்கு ஏதோ பிரமாதமான ஆபத்து இவ்வுலகில் சம்பவித்து விடும் என்பதாகக் கருதி வருகிறான்! ஆகவே ஒவ்வொருவனும் தான் செய்கிற சகல காரியங்களும் மதக்கட்டளைக்கு விரோதமில்லாமல் செய்வதாகவே கருதி வருகிறான். இக்கருத்தின் மேல்தான் மசூதிக்குச் செல்வதும், கோவிலுக்குச்செல்வதும், சர்ச்சுக்குச் செல்லுவதும் 'புண்ணிய ஸ்தல' யாத்திரைக்குச் செல்லுவதுமான காரியங்களுக்கு ஆக ஏராளமான பொருள்கள் செலவு செய்யப்படுகின்றன.

இந்தியாவைப் போன்ற பல மதங்களைக் கொண்ட ஒரு நாட்டில் உள்ள வைதீகத்தன்மையை எதிர்த்துப்போராடுவது சாமானியமான காரியம் ஆகாது: அவ்வாறு செய்வதில் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. இந்தியாவில் ஒருவன் ஒரு மதத்தைத் தாக்கும்பொழுது மற்ற மதத்தார் கவலையீனமாய் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மதத்தை தாக்கும்போது சீறி விழுகிறார்கள். மேல் நாட்டில் இவ்வாறு இல்லை. அங்கு கிறிஸ்து மதத்தைத் தாக்கினால் அதில் பற்றுடையவர்கள்—நம்பிக்கையுடையவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து நியாயமான முறையில் தர்க்கிக்க—விவாதிக்க முன் வருவார்கள்.

நமது நாட்டில் (இந்தியாவில்) உதாரணமாக ஒருவன் இந்து மதத்தை எதிர்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அவன் எவ்வளவுக்கெவ்வளவு அம்மதத்தைத் தாக்குகிறானோ அவ்வளவுக்கவ்வளவு இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவன் மகிழ்ச்சியடைவான். ஆனால் அதே மனிதன் இஸ்லாம் மதத்தைத் தாக்குவானேயாகில் உடனே அதே இஸ்லாம் மதஸ்தன் ஆத்திரத்தோடும், கோபத்தோடும் துள்ளிக்குதித்து சீறி விழுவான். ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு அறிவில்லாதவனாயிருந்தாலும் சரி, அவன் தன்னை சுற்றியிருக்கும்—தான் பார்க்கும்படியான மதங்களை பொய்யான மதங்கள்—போலிமதங்கள் என்றும் தன்னுடைய மதந்தான் மெய்யானதென்றும் தான் நம்புவது தான் உண்மை மதம் என்றும் கருதி வருகின்றான். இதன் உட்கருத்து என்னவென்றால் நமது நாட்டில் எம்மதத்தைச் சார்ந்தவனானாலும் சரியே, அவனுக்குத்தன் மதத்தின் உள்ளான எண்ணம்—நோக்கம்—சாரம் என்ன என்பதை அறியாததேயாகும். ஏன் அவர்கள் அவ்வழக்கத்தை பின் பற்றுகிறார்கள் என்றால் அவர்கள் அத்தகைய நம்பிக்கையிலேயே பிறந்திருக்கிறார்கள், இளமை முதற்கொண்டே அவ்வாறு இருக்க—நடக்கப் பழக்கப்பட்டும் கற்பிக்கப்பட்டுமிருக்கிறார்கள். இது தவிர சமூகத்திலும் அரசியலிலும் சௌகரியங்களும் செல்வாக்கும் கிடைக்கின்றன என்பதாலும் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள்.

இந்தியாவில் ஒவ்வொருவனும் இங்கு காணப்படும் பிரிவினையில் நம்பிக்கை கொண்டவனாய் இருந்து வருகிறான். ஆதாரமற்ற குருட்டு நம்பிக்கையில் இருந்து வருபவன் விடுதலையடையவேண்டுமானால் அவனுக்கு பிராணி நூலின்

அறிவையும் பரிணாம தத்துவத்தின் அறிவையும் விஞ்ஞான அறிவையும் கற்பித்தல் வேண்டும். இந்தியர்களுடைய அறியாமைக்கு இக்குருட்டு நம்பிக்கையே காரணம். இந்தக்காரணம் பற்றித்தான் ஆத்மீக விஷயத்திற்காக என்று வீண் காலத்தை கழித்து வருகிறார்கள். ஆத்துமா—ஜீவன்—உயிர் என்பதாக ஒன்றிருக்கிறது; அது மறு பிறப்பில் அதாவது இறந்த பின் அவனது ஆத்துமா இன்ன கதியையடையும் அல்லது மாறும் என்பது போன்ற நம்பிக்கைகள் சிலரிடத்தில் மேல் நாட்டிலும் இருந்து வருகிறது என்பது உண்மையே. ஆனால், அவர்களில் பெரும்பாலர் ஐயம், திரிபுஅற பூரண கல்வியறிவு பெற்றவர்கள் அல்ல. அந்நாட்டிலும் எங்கெங்கு சரியான கல்வி போதிக்கப்படுகிறதோ, பரிணாம தத்துவம் கற்பிக்கப்படுகிறதோ ஆங்காங்குள்ள மக்கள் மதத்தில் சொல்லப்பட்ட பழயகோட்பாடுகளும், போதனைகளும் உலகம் ஒப்புக்கொள்ளக்கூடிய விதத்தில் இல்லை என்பதை அறிந்து வருகிறார்கள். விஞ்ஞானத்திற்கும் மதத்திற்குமுள்ளவித்தியாசத்தை உணர்ந்து வருகிறார்கள்.

இந்நாட்டின் நிலைமைக்கும் அந்நாடுகளின் நிலைமைக்கும் மிகுந்த வித்தியாசம் இருந்து வருகிறது. இந்நாட்டில் எவ்வளவு படித்தவனானாலும் குருட்டு நம்பிக்கையிலும், மூடப்பழக்கத்திலும்ஒருஅணுவளவுகூட தவறாதவனாயிருந்துவருகிறான். ஆத்துமாவைப்பற்றிய நம்பிக்கைஅவனைவிட்டு தொலைவதற்கு மார்க்கம் தேடுவதில்லை. அதற்குப்பதிலாக அந்த நம்பிக்கையைநிலைநாட்ட அவதாரத்தைப்பற்றிய பிரச்சினையைஎடுத்துக்கொண்டு தர்க்கஞ் செய்து தன்னாலானவரையிலும் பாடுபட்டு வருகிறான். திவ்விய ('ஈஸ்வர') ஞானமென்ற கொள்கையும் இன்று இதே மூட நம்பிக்கையின் அஸ்திவாரத்தின் மீதே கட்டப்பட்டிருக்கிறது. ஆதலால் தான் அதில் சொல்லப்பட்டு வருகின்ற கோட்பாடுகளை மத பித்தன்—மத எத்தன் அதற்கு மரியாதையும் மதிப்பும் செலுத்தி வருகின்றான். உலகத்திலுள்ள மதங்களுக்கு எல்லாம் அடிப்படையாக—மூலகாரணமாக உள்ள பிரிவினையை எடுத்துக் கொண்டு அதில் காணப்படும் குற்றங் குறைகளை எடுத்து விளக்க வேண்டியதே பகுத்தறிவை பரவச் செய்யும் தொண்டர்களின் முதற்கடமையும் நீங்காக் கடமையுமாகும். நமது நாட்டில் உள்ள கிறிஸ்தவர்களும் மகமதியர்களும் அளவுக்கு மிஞ்சிய மூடப் பிடிவாதமும் குறுகிய மனப்பான்மையும் கொண்டவர்களாயிருந்து வருகிறார்கள். ஆதலால்தான் மதக்கோட்பாடுகளைப்பற்றி ஏதாவது

தாக்க ஆரம்பித்தால் தர்க்கத்துக்கோ—வாதத்துக்கோகூட ஒத்துக்கொள்ளாமல் சீறிவிழ ஆரம்பிக்கிறார்கள். ஆனால், பொதுவாக இந்துக்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை என்றே சொல்லவேண்டும். இவர்களில் அனேகர் மத சம்பந்தமான வாதப்பிரதிவாதங்களை சந்தோஷமாக வரவேற்கிறார்கள். இந்து மதம் மனிதனுக்கு அவசியமான சகல காரியங்களையும் எல்லா அறிவையும் ஞானத்தையும் அளிக்க இடங்கொடுக்கிறதென்று இவர்கள் நினைத்து வருகிறார்கள். இங்குள்ள அனேகர் வேதங்களை எழுதும்போதே இத்தகைய மாறுதல்களும், நவீன அறிவும் பரிணாமதத்துவத்தைப் பற்றிய அறிவும் தோன்றும் என்பதை அவர் ஆதியிலேயே எதிர்பார்த்தே 'பரிசுத்தமான' இந்து மதத்தை எழுதி வைத்தார்கள் என்றே சொல்லுகிறார்கள்.

இவ்வுண்மையை அறிய விருப்பமுடையவர் ஒரு கற்றறிந்த இந்துவிடம் பேசினால் உண்மை தெரியவரும். தத்துவ சாஸ்திரத்தைப் பற்றியும் மதக்கிரந்தங்களைப்பற்றியும் இவர்கள் சொல்லும் வியாக்கியானத்தைப் பார்த்தால் இவர்கள் வார்த்தைகளை அமைக்கும் சூழ்ச்சியில் எவ்வளவு சமர்த்தர்கள் என்பதையும், புதிய புதிய அர்த்தங்கள் கற்பிப்பதில் மிகவும் கைதேர்ந்தவர்கள் என்பதையும், ஒரு காரியத்தை எவ்வளவு சாமர்த்தியமாக மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்பதையும் ஒருவன் அறியாமல் இருக்க முடியாது. விநோதமான தேவதைகளிடத்தில் நம்பிக்கை வைத்துக்கொண்டு மதக்கோட்பாடுகளுக்கு வெகு அழகாக வியாக்கியானம் பண்ணுவதையும் தனித் தத்துவார்த்தங்கள் கற்பிப்பதையும் பார்த்தால் இவைகள் சாதாரணமாக மிதபுத்தியுள்ளவர்களைக் கண்டிப்பாக மயங்கச் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவ்வளவு தாராளமாக குயுக்தி வாதம் கற்பிக்கும் மதவாதிகளின் புலனுக்கு ஏனைய மதத்தைச் சார்ந்தவர்கள் அதாவது கிறிஸ்தவர்களோ, மகமதியர்களோ, மிக அற்பமாக—கேவலமாகத் தோற்றப்படுகிறார்கள் என்பதைப் பார்த்தால் மிக ஆச்சரியப்படக் கூடியதாக இருக்கிறது.

தங்களுடைய விநோதமான மதக்கோட்பாடுகளின் நம்பிக்கையை தற்கால நிலைமைக்கு ஏற்ப திருத்தியும் பொருத்தியும் வருகிறார்கள். அவர்கள் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கும் அவர்களின் மத்தியஸ்த தன்மைக்கும் நாம் பரிதாபப்படுவதா அல்லது நிந்திப்பதா என்பது தெரியவில்லை. எந்த கற்

சிலைக்கும் ஏதோ தத்துவார்த்தம் இருப்பதாக வியாக்கியானம் செய்யக்கூடும். அர்த்தமற்ற பொருத்தமற்ற குருட்டு மூடச் சடங்குகளைப்பற்றிய உண்மை அவர்களுக்குத் தெரிந்திருந் தும், கிராமங்களில் அறிவில்லாத ஏழை பாமர ஜனங்கள் செய்துவரும் மூடச் சடங்குகளுக்கும் ஆச்சார அனுஷ்டானத் திற்கும் இவர்கள் தத்துவார்த்தம் கற்பித்து அவைகள் நியாய மானதென்று சமாதானஞ் சொல்லி வருகிறார்கள்.

இந்த விதமான நூதன அர்த்தங்களைக் கற்பித்து ஒரு வருக்கும் புரியாத தன்மையில் ஏதோ அதில் மகத்துவம் இருப் பதாகச் சொல்லி வருவதால்தான் இன்று எவ்வளவோ பேர் படித்த மதிப்புக்குரியவர்களும், வெகு பயபக்தியோடு ‘விநாய கர்’ பூஜையையும், ‘ஹனுமார்’ பூஜையையும் பெரிய ஆடல் பாட லுடன் நடத்தி வருகிறார்கள். விகாரமான சிரிக்கத்தக்க விக்கிரகங்களில் ஏதோ ‘புனிதத்தன்மை’யும் ‘தெய்வத்தன்மை’ யும் அவைகளின் தோற்றத்தில் பிரகாசிக்கிறதென்று, அவை களின் மகத்துவம் உண்மையான விசுவாசிக்கே புலப்படும் என் றும் சொல்லி வருகிறார்கள்.

நமது நாட்டில் மட்டும் இவ்வாறு இருந்து வருகிறது என்று ஒருவரும் எண்ணிவிட வேண்டியதில்லை. மேல் நாடுகளிலும் கிராமங்களில் போய்ப் பார்த்தால் அவர்கள் குருட்டு நம்பிக்கை யின் காரணமாக பகுத்தறிவின்றி நடந்து வருவதும் விக்கிரக வணக்கம் செய்து வருவதும் நன்கு தெரியவரும்.

நன்றாகக் கற்றறிந்த ஒரு இந்து, பகுத்தறிவை ஆதரிக்கவோ பகுத்தறிவுவாதி என்று சொல்லிக்கொள்ளவோ முன்வராததற் கும் அஞ்சுவதற்கும்பகுத்தறிவாளர்களை வெறுப்பதற்கும் கார ணம் அவர்களுடைய சமூக வாழ்க்கை மதத்திலே இணைக்கப் பட்டு இருப்பதேயாகும். சாதாரணமாக இந்துக்கள் பிடிவாத மான குணத்தையும் வழக்கத்திற்கு மாறுபாடானஎண்ணத்திற்கு இடங்கொடாத சுபாவத்தையும் உடையவர்கள். மேலும் நடை பெற்று வருகிற முறைக்கும் அனுஷ்டானத்திற்கும் பழக்க வழக் கத்திற்கும் யாதொரு இடைஞ்சலும் செய்யக் கூடாது என்ற எண்ணத்தையும், சுற்றத்தார், நண்பர் முதலியோர்களின் மனம் புண்பட நடந்துகொள்ளக்கூடாது என்ற மனப்பான்மையை யும் உடையவர்கள். தங்களுடைய நம்பிக்கைக்கே முரணான விஷயங்களாயிருந்தாலும் அவைகளை வெகு முகமலர்ச்சியோடு வரவேற்பார்களே தவிர பகுத்தறிவாளர்கள் சொல்லக்கூடிய

எவ்வளவு உண்மையான நியாயமான விஷயங்களையும் யோசனைகளையும் ஏற்கமாட்டார்கள்.

இந்தியாவில் உள்ள மற்ற மதஸ்தர்களைப் போலவே மகமதியர்களும் பிற்போக்கானவர்கள் என்றும் அறியாமையில் மூழ்கியிருப்பவர்கள் என்றும் பெரும்பாலும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மதவெறிகொண்டவர்களில் இவர்கள் இயற்கையிலே தலைசிறந்தவர்களாய் இருந்து வருகிறார்கள். ஆதலால் அவர்களுடைய மதக்கோட்பாட்டைப்பற்றி ஏதாவது குறை சொல்லுவதை அவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆதலால் அவர்களிடத்தில் பகுத்தறிவைப்பற்றிப்பேசுவதால்பேராபத்தே விளையும். இது தவிர அவர்களுக்கு தற்காலத்தில் இருந்துவரும் அறிவோடு நாம் பகுத்தறிவைப்பற்றி பேசுவது வீண் காலப் போக்கோடு நமது அருமையான காலத்தையும் வீணாக கழித்தலேயாகும்.

அவர்கள் அடைந்த இந்த நாகரீகத்திற்கு அவர்களுடைய மதமே முக்கிய காரணம் என்பதாக கருதி வருகிறார்கள். ஒவ்வொரு மகமதியனும் தன் சமூகத்தில் பெரிய தெய்வ பக்தனாக நடந்து கொள்ளவோ அல்லது மற்றவர்கள் தெய்வபக்தனாகதன்னைக் கருத வேண்டுமெனவோ நினைத்து வருவது போல மற்ற சமூகத்தாரும் தன்னை மதித்து வரவேண்டும் என்பதாக நினைத்து வருகிறான். அவர்களில் படித்த ஒரு சிலர் (இரண்டொருவர்) மட்டும் இதன் உண்மையறிந்து நியாயமாக நடந்து அரசியலிலும் தலைமை வகித்தும் நடத்தியும் வருகிறார்கள். இஸ்லாம் மதமும் கிறிஸ்தவ மதத்தைப்போன்று சகிப்பற்ற—பொறுமையற்ற கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது. அச்சமூகத்தாரிடமிருந்து இந்த மனப்பான்மை ஒழிய வேண்டுமானால் சரியான கல்வியொன்றினால்தான் அவர்களுடைய கண்களின் உண்மையொளி பிரகாசிக்கத் தொடங்கி அவர்களுடைய மதக்கோட்பாட்டில் உள்ள குற்றங்குறைகளையும் கண்டு கொள்ள முடியும்.

இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் தொகை மிக்க குறைவு. அவர்கள் சமூகம் ஒரு சிறு மைனாரிட்டியாக இருந்து வருகிறது. இவர்களில் பெரும்பாலர் படித்தவர்களே. அவர்கள் பெற்ற கல்விக்கு அவர்கள் பாதிரிமார்களுக்கு என்றும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களடைந்த கல்வி ஒரு சார்பான

தென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஏனெனில் இவர்கள் தவறான, பொய்யான கல்வியறிவைப் பெற்றவர்களாலே போதிக்கப்பட்டிருப்பதாலும் கற்பிக்கப்பட்டும் பழக்கப்பட்டும் பயிற்சிக்கப்பட்டும் இருப்பதாலும் இவர்கள் குறுகிய மனப்பான்மையோடும் மதவெறித்தன்மையோடும் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு கல்வி கற்பித்த மிஷனரிகள் தங்களுடையமதக் கொள்கைக்கும் மதக்கோட்பாட்டுக்கும் அபாயத்தை விளைவிக்கக்கூடிய விஞ்ஞானத்தை அவர்கள் வெறுக்கவும், அவநம்பிக்கை கொள்ளவும் செய்துவந்த காரியத்தில் அப்பாதிரிகள் வெற்றி பெற்றுவிட்டார்கள். இந்தியாவில் இன்று கிறிஸ்தவர்களாய் இருந்து வருபவர்கள் இந்துக்களாயிருந்தவர்களே. இவர்கள் கிறிஸ்துவர்களானதினால் தாங்கள் சமூகத்தில் முன்னேற்றமடைந்ததோடு உத்தியோகங்களில்இவர்களுக்கு சிலாக்கியம் கிடைக்கும் பாக்கியத்தையும் பெற்றிருக்கிறார்கள். இவர்களிடத்தில் இந்துக்களுக்கு உள்ள சகல குருட்டு நம்பிக்கைகளும் இருந்து வருகின்றனவென்பதை இவர்கள் மதத்தில் நடந்து கொள்ளும் விதத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். ஏதோ ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் சமூக விஷயத்திலும் மதவிஷயத்திலும் ஏனையோர்களைவிட எந்த வகையில் சிறந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்? அவர்களுக்கு சரியான விஞ்ஞான அறிவும் தாங்களே யோசித்துச் செய்யக்கூடிய ஆற்றலும் அளிக்கப்படாதவரையில் பயிற்சிக்கப்படாதவரையில் பகுத்தறிவாளர்களாக மாறுவதில் ஒரு பயனும் ஏற்படாது. இப்பொழுது அவர்களது நிலைமை மதக்குருக்களின் கையாளாக மதிக்கப்படும் தன்மையில் இருந்து வருகிறது. இவர்கள் இந் நிலையை விட்டு மாறவேண்டுமானால் பல வருஷங்கள் செல்லும்.

இந்தியாவில் பாரசிகர்கள் மிகவும்சிறுபான்மையினராயிருந்தாலும் அவர்கள் கல்வியறிவில் தேர்ச்சி பெற்றவர்களாய் இருந்து வருகிறார்கள். அவர்களும் மதப்பித்தர்களாயும் நவீன எண்ணங்களையும், நவீன கல்வியறிவையும் தங்கள் சமூகத்தில் வளரவிடாமல் தடுக்கும் வல்லமையும், போதிய செல்வாக்குமுடையவர்களாயும் இருந்த வந்தாலும் அவர்களிடத்தில்தான் பகுத்தறிவு சுலபமாகவெற்றிபெற முடியும்.

ஆகவே, இந்தியாவில் பகுத்தறிவு பரவவேண்டுமென்றால்—பகுத்தறிவு நிலைபெறவேண்டுமானால் இங்குள்ள பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் அனுபவசாலிகளான பகுத்தறி

# மார்க்கசகாய சாஸ்திரிக்கும் மருதையா பிள்ளைக்கும் சம்பாஷணை.

(கோமாளி எழுதுவது.)

மார்க்கசகாயசாஸ்திரி:—வாரும் பிள்ளைவாள்! வெகு நாளாக காண்ரதே இல்லையே!

மருதையா பிள்ளை:—ஆமாம், பாழாய்ப்போன எலக்ஷன் தான் உம்மையும் என்னையும் சந்திக்க விடவில்லையே. உமக்குத் தெரியாதா?

சாஸ்திரி:—போனால் போகட்டும், அது தான் முடிந்து விட்டதே. க்ஷேமம் தானே?

பிள்ளை:—நீங்களெல்லாமிருக்கும்போது க்ஷேமத்துக்கு என்ன குறைவு?

சாஸ்திரி:—எங்களால் என்ன உங்களுக்கு ஆக வேண்டிய திருக்கு?

பிள்ளை:—ஆக வேண்டியது ஆகாவிட்டாலும் தொந்திரவு கொடாமலும் எங்கள் உரிமைகளில் நீங்கள் ஆக்ரமிப்புச் செய்யாமலுமிருந்தாலே எங்கள் க்ஷேமத்துக்கு ஒரு குறைவும் வராது.

---

வாளரைக் கொண்டு நடத்தப்படவும், சிறுவர்களை இளமை முதற் கொண்டே மூட பழக்க வழக்கங்களில் நம்பிக்கை வைக்காவண்ணம் அவர்கள் பயிற்சிக்கப்படவும் குருட்டு நம்பிக்கை வேருடன் களைந்தெறியப் படவும் வேண்டும் என்பதுதான் எனது அவா. பகுத்தறிவு நமது நாட்டில் பரவவேண்டும் என விரும்புகிறவர்கள் யாவரும் நான் மேலே சொல்லிய கருத்தை மனதில் வைத்து தங்களால் ஆனவரை பாடுபடுவார்கள் என நம்புகிறேன்.

சாஸ்திரி:—ஆனால் நீங்கள் சொல்வதில் ஏதோ விஷய மிருக்காப்போல் தோன்றதே. அதை வியக்தமாகத்தான் சொல்லுங்களேன்.

பிள்ளை:—எல்லா விஷயங்களிலும் உங்கள் விஷயங்கள் வியாபித்து இரண்டறக் கலந்திருக்கும்போது எதைச்சொல்லு வது? எதை விடுவது?

சாஸ்திரி:—இருந்தாலும் கூட ஒன்றையாவது சொல்ல லாமல்லவா?

பிள்ளை:—என்னய்யா சொல்வது? சுருக்கமாகச் சொன்னால் மறைற்சோற்றில் கல்லைக்காட்டுவது போல ஆகுமே ஒழிய வேறென்ன சொல்வது?

சாஸ்திரி:—இப்படி சொல்லிக்கிண்டே போனால் எப்படித் தான் விஷயம் தெரிவது? என்னமோ தெய்வந்தான் பார்த்துக் கொள்ளணும்.

பிள்ளை:—அதைத்தான் எங்கு விட்டிருக்கிறீர்கள், அதை யுந்தான் ஏமாற்றுகிறீர்கள்.

சாஸ்திரி:— என்ன பிள்ளைவாள்! போகப்போக எதேஷ்ட மாக அபாண்டமாகப் பேசப் பழகிவிட்டீரே.

பிள்ளை:—போதும் போதும், ஒன்றும் பேசாதேயும்.

சாஸ்திரி:—தெய்வ விஷயமாக ஒன்றாவது சொல்லுமே, கிரமமாயிருந்தால் அபசார க்ஷாபணம் செய்து கொள்ளலாமன் றோ? அந்தப் புண்ணியம் உங்களையாவது அடையட்டுமே.

பிள்ளை:—அது உண்மையானால் நான் கேட்பதற்கு மன தை மறைக்காமல் உண்மையைச் சொல்லிவாரும்.

சாஸ்திரி:— ஆஹா அப்படியே ஆகட்டும், இப்படிப்பேசி னாலன்றோ தேவலை.

பிள்ளை:—ஆண் தெய்வங்களை யார் பூஜிப்பது? பெண் தெய்வங்களை யார் பூஜிப்பது?

சாஸ்திரி:—எல்லா தெய்வங்களையும் நாங்கள்தான் பூஜிக்கி றோம்.

பிள்ளை:—நாங்கள்தானென்றால் நீங்களும் உங்கள் மனை விகளுமா?

சாஸ்திரி:—பெண்கள் சந்நிதிகளில் வந்து பூஜிப்பாளோ? எல்லாம் புருஷாள்தான்.

பிள்ளை:—பெண் தெய்வங்களை யார் வேணுமானாலும் தூரவிருந்து தொழலாமே ஒழிய பக்கத்தில் அணுகி அதன் உடைகளைக் களைந்து அபிஷேகாதிகளைச் செய்யும் போது ஒவ்வொரு அவயங்களைத் தொட்டு அதின் மாசுகளைப் போக்கித் தேய்த்து சுத்தம் செய்ய ஆண்களின் கைகளை உபயோகிக்கலாமா? இது ஒழுக்கமாகுமா?

சாஸ்திரி:- இதென்னமோ ஒரு பிரமாத அபத்தம் செய்து விட்டதாகச் சொல்லி விட்டீளே! பிள்ளைவாளே, எதையும் நன்னாக் கேட்கணும். அப்போதல்லவா விஷயம் வியக்தமாகும்? கேளுங்கோ சொல்றேன். பெரியவாள் இதெல்லாம் யோசித்தேதான் அதற்கெல்லாம் பரிஹாரம் செய்து வைச்சுட்டுப் போயிருக்காளே.

பிள்ளை:- அதென்ன பரிஹாரமய்யா?

சாஸ்திரி:- அர்ச்சகன் பிம்பத்தினிடம் போகும் போதே ஒரு மந்தரமுண்டு. அதை ஜபித்துண்டு போனால் அர்ச்சகன் ஸ்திரீயாகதன்னை மதித்துக்கொள்றான். அப்போதவனுக்கு தான் ஒரு புருஷன் என்கிற ஞாபகமே வருகிறதில்லை. அப்போது அவன் அம்பாளுக்கு எல்லாவித கைங்கர்யமும் செய்யலாம். அதில் யாதொரு தோஷமும் ஏற்படுகிறதில்லை. இல்லாவிட்டால் பெரியவாள் சம்மதிப்பாளா? இதெல்லாம் செய்து வைக்காமலா புருஷாளை அம்பாள் பிம்பத்தை ஸ்பர்சிக்கச் செய்வாள்?

பிள்ளை:- அப்படியா, இது எல்லோருக்கும் பொதுதானே?

சாஸ்திரி:- என்ன பிள்ளைவாள், இன்னுமா சந்தேகம்? இது சாஸ்திரயுக்தமாச்சே! இதையாரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். அப்படி இதை யாராவது ஆக்ஷேபிப்பாளேயானால் அது மகாபாதகம்.

பிள்ளை:- பாதகமென்றால் அர்த்தமென்ன? எனக்கு விளங்கும்படி சொல்லுமே.

சாஸ்திரி:- அதையும் சொல்றேன் கேளும். இப்படி யன்னா கேட்கணும். அதை யாராவது ஆக்ஷேபித்தால் மாத்ரு யோனி பரீக்ஷைக்குச் சமமாகும்.

பிள்ளை:- இதை யார் செய்யத் தவறினாலும் அதேதான் பலனா?

சாஸ்திரி:- எல்லோருக்கும் ஒரே சாஸ்திரம்தான். எனக்கு வேறு, உங்களுக்கு வேறு என்றுண்டா? எல்லாம் ஒன்றுதான்.

பிள்ளை:- அப்படியானால் ஷை மந்திரத்தை எனக்கு உபதேசம் செய்யுங்கள். நான் தம்முடைய தேவிகளுக்கு அம்பாள் விக்கிரகத்துக்கு அர்ச்சகர் செய்யும் சிஷ்ரூஷை எல்லாம் செய்கிறேன். இதில் தமக்கு ஆக்ஷேபமுண்டா?

சாஸ்திரி:- போமய்யா போம். இதுதானா யோக்கியதை. உம்மோடு பேசினதே தப்பு.

பிள்ளை:- நானென்ன தப்பு செய்தேன்? நீர் சொன்னதை செய்கையில் செய்யச் சொன்னால் கோபித்துக்கொள்வதா? ஞாயமல்லவா சொல்லவேண்டும்.

சாஸ்திரி:- உம்மோடு ஞாயம் வேறையாவென்று பேசாது சென்று விட்டார்.

---

# பகுத்தறிவு சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சென்றமாத பகுத்தறிவு இதழில் சந்தா வாய்தா முடிந்தவர்களுக்கெல்லாம் பச்சைத்துண்டுக் காகிதத்தின்மூலம் தங்கள் சந்தாவை அனுப்பி வைக்கும்படி அறிக்கை அனுப்பியிருந்தோம். நாளது வரையில் ஒருசிலரே தங்கள் சந்தாவை அனுப்பி மறு வருஷத்துக்கும் தங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொண்டார்கள். ஆதலால் இன்னும் பணம் அனுப்பாத சந்தாதாரர்கள் உடனே தங்கள் சந்தாவை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அந்தப்படி பணம் அனுப்பி வைக்காதவர்களுக்கு ஜூன்மாதப் பத்திரிகை முதல் கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

சிறுகதை

# காதலோ காதல்!

(ஜே. பி. கிருஷ்ணன்)

"சாவித்திரிக்கும், அவனுக்கும் ஏற்பட்டுவிட்ட பழக்கம், விபரீதம் விளைவித்துவிடலாகாதென்பதே சோலைமுத்து நாடாரின் பெருங் கவலை................"மெய்க் காதல்" என்ற கப்பலில் ஏறி இன்பம் என்னும் கடலில் உல்லாசமாகச் சென்று கொண்டிருந்தனர். பாவம்! அவர்களுக்குப் பின்புறத்திலிருந்து புறப்படும் கோரமான புயற்காற்று அவர்களுக்குத் தோற்ற வில்லை!...........அந்த இளங்காதலர்களைக் கூட்டுவிக்க பழங் குள்ளர் நிறைந்த சமுதாயம் மறுத்துவிட்டது ஆனால்........!"

## 1.

சாவித்திரியின் அபிலாஷைகள் அப்படியொன்றும் பிரமாதமானதன்று. அவள் விரும்புவதெல்லாம் நாலுபேரைப்போல நல்ல உடையும், நகையும் அணிதல்வேண்டும்; காதல் நிறைந்த ஒரு நல்ல கணவன், தகுந்த சினேகிதைகள், படிப்பதற்கு நல்ல புத்தகங்கள், பத்திரிக்கைகள் வேண்டும்; இவ்வளவு தான். பரிபக்குவமெய்திய ஒரு இளமங்கையின் இவ்வபிலாஷைகளில் நாம் குற்றம் காணமுடியாது. இயற்கையின் நியதி.

ஆனால், சாவித்திரியின் இருதயத்திலே நிறைந்து வழியும் நினைப்புகளையெல்லாம் வேருடன் கல்லியெறிந்தது அந்தக் குடும்பத்தின் வறுமை! சாப்பாட்டுக்கு தின வருமானத்தை எதிர்பார்த்து நிற்கும் பரம ஏழைக் குடும்பத்திலே உதித்தவள் சாவித்திரி. அவளுடைய தகப்பன் சோலைமுத்து நாடார் வாழ்க்கையின் வெற்றியை நோக்கி எதிர் நீச்சம்போட்டுக் கைசோர்ந்தவர். வறுமையின் கொடுஞ்சுழலில் சிக்கிப் பெருந்துன்பமடைந்தவர். "பட முடியாதினித்துயரம் பட்டதெல்லாம் போது"மென்று பகலிரவாய் மனம் வெந்து

மாய்ந்து கொண்டிருப்பவர். அவருடைய மூத்த பெண் சாவித்திரி. அவருக்கு மற்றும் இரண்டுபெண்கள் உண்டு.

சாவித்திரி பருவமடைந்து 6வருடங்கள் கடந்துவிட்டன. அவள் வறுமையாளர் வயிற்றிலே பிறந்தவளென்று, அழகும் அறிவும் அவளைப் புறக்கணித்துவிடவில்லை. ஆனால் அதனை மதிப்பவர் யாருமில்லை. அவள் சேற்றிலே மலர்ந்த செந்தாமரைப் புஷ்பம்; "ஏழைப் பெண்" என்ற காரணத்துக்காக சமுதாயம் அவளை வெகு தூரத்திற்கப்பால் தள்ளி வைத்துவிட்டது. ஆம்! பொருளற்ற பொறுமையாளருக்கு இவ்வுலகமேது?

சோலைமுத்து நாடாரும், அவரது மனைவியும் மிகுந்த கர்நாடகப் பித்தர்கள். சாதிப் பற்றுதலும், தெய்வ நம்பிக்கையும் வாய்ந்தவர்கள். அந்த ஏழைத் தம்பதிகள்பிள்ளைப் பேற்றின் இன்பத்தை—இல்லை—துன்பத்தைப் பரிபூரணமாக அனுபவித்தனர். சாவித்திரியின் அழகும், புத்திசாலித்தனமும், இனிய சுபாவமும், அவர்களை ஆனந்தசாகரத்திலாழ்த்தின. ஆனால் மனுவினாடியிலே "பரதேசிகளான எங்கள் வயிற்றிலா இச்சோதிமணி வந்து பிறக்க வேண்டும்?" என்ற அங்கலாய்ப்பு அவர்களைப் பிடித்து உலுக்கியது. தங்கள் குமாரியை சொந்தச் சாதியிலே ஒரு நல்ல கணவனுக்கு மனைவியாக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். கைகூடவில்லை. ஆம்! கைகூடுமென்ற நம்பிக்கையும் மெதுவாக மறையத் தொடங்கிவிட்டது. அன்பு காருண்யம், அறிவு, சமத்துவம் இவைகளைப் பிரதானப் படுத்தும் ஒரு தைரியமுள்ள வாலிபன் அந்தக் குலத்திலே தோன்றியிருக்கவில்லை. பெற்ற மனம் பெரிதும் வாடித் தவித்தது. "மகளின் மணவினையைக் காண்போமா?" என்று அவர்களின் இருதயம் கதறிக்கொண்டிருந்தன. ஆனால் சமுதாயத்தின் செவி "செல்வப் பெருமை" என்ற செம்பஞ்சினால் அடைக்கப்பட்டுக் கிடந்தது. இயற்கையன்று, செயற்கைச் செவிடு.

2.

ரங்கநாதன் பெரிய குடும்பத்துப் பையன்; கல்வியாலும், செல்வத்தாலும் சிறந்தவன். தகுந்த அழகும், அறிவும், நேர்மையுள்ளமும் படைத்தவன். அந்தச் சிறிய ஊரில் சோலைமுத்து நாடாரின் குடும்பத்தின் பேரில் வாஸ்தவமான

கருணையுள்ள ஒருவன் இருக்கிறானென்றால் அவன் ரங்கநாதனே யாவன். ஆனால் அவனது கருணையும் செய்கையில் கனியவில்லை. அவன் அந்தக் குடும்பத்துக்கு ஏதாவது உபகாரம் செய்ய நினைத்தால் அதற்குப் பெரிய முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் பெற்றோர்களும், தங்கள் வீட்டிலே தண்டச்சோறு சாப்பிடும் தாய்மாமன் தணிகாசலமுமேயாவர். ஆகவே அவனது பச்சாதாபம் வாயளவோடு நின்றது. ரங்கநாதன், தன் பெற்றோர் கிழித்த கோட்டைத் தாண்டியதில்லை; தாண்டத் துணிந்ததுமில்லை. ஆனால் எதற்கும் ஒரு எல்லையுண்டல்லவா? எத்தனை நாளைக்குத்தான் பணத்திற்கும், பழக்கத்திற்கும், அடிமைப்பட்டுக்கிடப்பது?

சோலைமுத்துநாடாருக்கு ரங்கநாதன் பழக்கமானவன் தான். என்றாலும் அவனிடமிருந்து அவர் எவ்வித உதவியும் எதிர்பார்க்கவில்லை. காரணம் அவன் பெற்றோருக்கு அடங்கினபிள்ளை; இளைஞன். சாதியிலும் வேறுபட்டவன். மேலும் பணக்காரன். ரங்கநாதன் அடிக்கடி தன் குடிசைக்கு வருவதுபற்றி அவர் மகிழ்ச்சியடைந்தாலும், அதற்காக வருந்தவும் செய்தார். சாவித்திரிக்கும் அவனுக்கும் ஏற்பட்டுவிட்ட பழக்கம் விபரீதம் விளைவித்து விடலாகாதென்பதே சோலைமுத்துநாடாரின் பெருங்கவலை.

ரங்கநாதனின் பெருந்தன்மை, சமத்துவம், அன்பு, அறிவு இவைகளைக் குறித்து, சாவித்திரி தன்னிடம் பேசுவதை அவர் அடியோடு வெறுத்தார். எனினும் மறுத்துப் பேசும் துணிவில்லை. சாவித்திரியின் அந்தரங்க எண்ணத்தையும், தன் குலப்பெருமையையும் நினைத்து நெஞ்சம் குமுறுவார்; பெருங் குழப்பமெய்துவார்.

அன்று வெளியில் எங்கெல்லாமோ சுற்றியலைந்துவிட்டு வந்த சோலைமுத்துநாடார், உடம்பலுத்தவராய் "உஸ்" என்று வெளித் திண்ணையிலே உட்கார்ந்தார். தந்தையின் வரவை யுணர்ந்த சாவித்திரி வெளியே வந்தாள். அவளது தாயார் சுரம் கண்டு படுத்தவள் உள்ளே பிணத்திக்கொண்டு கிடந்தாள். தங்கைமார்கள் சீவனத் தொழிலாகிய தையல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தனர். தந்தையாரின் வாடி வதங்கிய வதனத்தைக் கண்டதும் சாவித்திரியின் மனம் துணுக்குற்றது. அவரடைந்த வேதனை தன்னைப்பற்றிய

தென்பதை அவள் உணர்ந்து கொண்டாள். எனவே தந்தையை நோக்கிப் பரிவுடன் கூறினாள்.

"அப்பா! வறுமைப்பேய் நம்மை கொஞ்சம் கொஞ்சமாக மென்று விழுங்கிக் கொண்டே வருகிறது. எனது நிலைமை வேறு தங்களுக்குப் பெருத்த சங்கடத்தையளிக்கிறது. ஐயோ! நான் எப்பொழுதும் பச்சிளங் குழந்தையாகவே இருந்துவிடலாகாதா? பாழும் இயற்கையே என்னை வதைக்கிறது. எனக்குமட்டுமல்ல, நமது குடும்பத்துக்கே சீக்கிரத்தில் ஏதாவது விமோசனம் தேடியாக வேண்டும்" என்று.

"விமோசனம்! விமோசனம்!! வெகு அழகான வார்த்தை. இனிமையான அர்த்தமுள்ளது. ஆனால் கிரியாம்சையில் ஏழைக்குப் பயன்படாதது! நான் அதைத் துருவித் துருவித் தேடிப்பார்த்து விட்டேன். கிடைக்கவில்லை. என்னைப் பொறுத்தமட்டில் இனிமேல் விமோசனமென்பது சாவில் தான்!" என்று மிக்க வெறுப்புடன் கூறினார் சோலைமுத்துநாடார். அவரது கண்கள் கலங்கின. ஊன்றியிருந்த முழங்காலின் நடுவே அவர் முகம் கவிழ்ந்தது. முழங்காலைச் சேர்த்து கரங்களால் கட்டியவண்ணம் சிறு குழந்தையைப்போல விம்பினார். அவர் மனம் உடைந்து விட்டது. ஏழ்மையின் கோரத்தையும், சமுதாயத்தின் புறக்கணிப்பையும் அந்த ஏழை நெஞ்சத்தால் தாங்க முடியவில்லை; எல்லைக்கு மீறிப்போய்விட்டது.

தந்தையின் துயரைக்கண்ட சாவித்திரியின் மனம் இடிந்து கரைந்து விட்டது. துக்கம் தொண்டையைக் கவ்வியது, தலை சுழன்றது. சட்டெனத் தகப்பனின் அருகிலமர்ந்து அவருடைய கரங்களையன்போடு வருடிய வண்ணம் கூறினாள்.

"அப்பா! நீங்கள் மனசு விட வேண்டாம். நமது விமோசனத்துக்கு ஒருவழியிருக்கிறது. உங்கள் சம்மதம் மட்டுமிருந்தால்"......மேலே சொல்லாமல் நிறுத்தினாள். அவள் கண்கள் ஆழ்ந்த சிந்தனையுடன் பூமியை நோக்கின.

அவருடைய மனத்திலே ஏதோ நம்பிக்கை மின்னி மறைந்தது. அவள் சொல்லுவதைக் கேட்க அகம் துடித்தது. எனவே பிரேமையுடன் சொன்னார்.

"சாவித்திரீ! நல்லவழிக்கு நான் அவசியம் சம்மதப்படு வேன். தைரியமாகச் சொல்லம்மா" என்று.

"அப்பா! கோவிச்சுக்கப்படாது, சாதியைக்காப்பாற்ற வேண்டுமென்ற உங்கள் பிடிவாதம் நமக்கு எவ்வித நன்மை யும் செய்யவில்லை; செய்யப்போவதுமில்லை. நான் பெரிய மனுஷியாகி 6 வருஷத்துக்கு மேலாகியும், என்னை மணக்கச் சாதியான் எவனும் முன் வரவில்லை. நாம் ஏழைகளான தால் நம்மிடம் பேசுவதையே அவர்கள் கேவலமாக நினைக் கிறார்கள். ரங்கநாதன் அந்நிய மனிதர்; வேறு சாதி யினர்; மிகுந்த செல்வந்தர். எனினும் நம்மோடெல்லாம் எவ் வளவு அன்பாகப் பேசிப்பழகுகிறார். எவ்வளவு கருணையுள் ளவர். அப்பா! அவர் என்னை மணந்து கொள்வதாயிருந் தால், என் பெருங்குறை தீர்வதுடன், நமது குடும்பத்துக்கே ஒரு ஆதரவில்லையா? யோசித்துப் பாருங்கள். நமக்கு வேண்டுவது சாதியல்ல, நேர்மையான வாழ்வு" என்று கூறி னாள் சாவித்திரி.

சோலைமுத்து நாடார் குனிந்ததலை நிமிராமல் வெகு நேரம் யோசித்தார். ஏதோ முடிவுக்கு வந்தவராய் சாவித் திரியின் முகத்தை நோக்கினார். உடைந்த குரலில் சொல்லு கிறார்.

"உண்மை தான் சாவித்திரி! என் மனத்தில் நன்றாகப் படுகிறது. ஆம்! சாதியையும், சாதியாரையும் பிடிவாதமாக நம்பித்தான் இக்கதிக்கு வந்து விட்டேன். ஒரு பயலும் என்னை கவனித்தானில்லை. ஆனால், மகளே! உன் எண் ணம் நிறைவேறுமா? ரங்கநாதனுடைய பெற்றோர்கள் பணம் படைத்தவர்கள்; மேலும் பழுத்த வைதீகர்களாச்சே! நமக்கும் அவர்களுக்கும் எத்தனை தூரம்? எவ்வளவு வித்தி யாசம்? இந்த காரியத்திற்கு ரங்கநாதனுக்குத் தான் எவ் வளவு துணிச்சல் ஏற்பட வேண்டும்? பின் விளைவு எப்படி யோ! அந்தச் சம்பந்தத்தை என்னால் நினைக்கவே முடிய வில்லையே!"

சாவித்திரியின் வதனம் சிறிது மலர்ந்தது. "அப்பா அந்தப் பொறுப்பு என்னைச் சார்ந்தது. நீங்கள் கவலைப் பட வேண்டாம். ரங்கநாதன் யாவுமறிந்தவர். நம்மைக் கைவிடமாட்டார்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

3.

காவிரியாற்றிலே ஆடிமாசத்துப் பெருவெள்ளம் பேரிரைச்சலுடன் கம்பீரமாக ஓடிக்கொண்டிருந்தது. பொழுது மறைந்த சமயம், மெதுவாக இருள் படர்ந்து கொண்டிருந்தது. கரையிலுள்ள மரம், செடி, கொடிகளினின்றும் கிளம்பும் பட்சிகளின் இனிய குரல் மனத்திற்கு மகிழ்வை யூட்டியது. ஆற்றிலே தவழ்ந்து வரும் தென்றல் "ஜில்" லென்று வீசிக்கொண்டிருந்தது. ஒரு ஒதுக்கிடத்திலே அவர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

"சாவித்திரி! அப்பாவிடம் இன்னும் சொல்லவில்லையா? உனக்கு வெட்கமாயிருந்தால் நானாவது சொல்லட்டுமா?" என்று கேட்டான் ரங்கநாதன்.

"வேண்டாம். நானே சொல்லிவிட்டேன். அனேகமாக அப்பாவின் சம்மதம் கிடைத்த மாதிரிதான். அவருடைய பழைய பிடிவாதம் வெகுவாகத் தளர்ந்து விட்டது. இனி உங்கள் பங்கு தான் பாக்கியிலிருக்கிறது. ஆனால் சமுதாயத்திலே நீங்கள் மலையுச்சியிலிருக்கிறீர்கள். நான் மடுவில் விழுந்து கிடக்கிறேன். நமக்கிடையிலே ஆயிரம் தடைகள் நம்மை விழுங்கக் காத்துக்கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் வென்று என்னை வாழவைக்கப்போகிறீர்களா? அல்லது மாளவைக்கப் போகிறீர்களா" என்று ஆர்வத்துடன் கேட்டாள் சாவித்திரி.

"சே! என்ன அமங்கலமான வார்த்தை! சாவித்திரி! உன் மனக்குழப்பத்தை விடு; உன்னை மணந்து வாழ்வதே தீர்க்கமான முடிவு. எந்தத்தடைகளையும் நான் பொருட்படுத்தப் போவதில்லை. இன்றிரவு என் பெற்றோரிடம் விஷயத்தைச் சொல்லப் போகிறேன். அவர்கள் சம்மதித்தலாச்சு, முரண்டினால் வீட்டை விட்டுப் புறப்பட வேண்டியது தான். என் மாமாவைப்பற்றிக் கவலையில்லை. அந்த வஞ்சகரின் எண்ணம் நிறைவேறப் போவதுமில்லை. நமது காதல் எவ்வளவு பரிசுத்தமுள்ளதாயும், வலிவுள்ளதாயுமிருந்தாலும், நமக்குத் துணிச்சல் இருந்தாலொழிய நாம் வெற்றிபெற முடியாது. எப்படியும் நமது பிற்கால வாழ்வையும், உங்கள் குடும்ப நலத்தையும், பாதுகாக்க எனக்கு ஆற்றலிருக்கிறது. போதிய சவுகரியமுள்ளஎன் போன்ற வாலிபர்களே தொடை நடுங்கினால், அப்புறம், சமுதாய முன்னேற்றம், காதல் மணம்,

கலப்புமணம் என்பவைகளெல்லாம் வெறும் வாய்ப்பந்தல்களாக முடிந்து விடும். கண்ணே! என் மேல் சந்தேகமா? நான் சாவுப் பரீட்சைக்கும் தயார்! உனக்காக, உனது காதலுக்காக, எனக்குள்ள அனைத்தையும் தியாகம் செய்யவும் காத்துக் கொண்டிருக்கிறேனே, இன்னுமென்ன!'' என்று மிகுந்த கனிவுடன் கூறினான் ரங்கநாதன்.

சாவித்திரியின் வதனம் சந்தோஷத்தால் பொலிந்தது. இதழ்கள் விரிந்தன. அவளுடைய இயற்கையழகு பன்மடங்கு பெருகி வழிந்தது. காதல் நிறைந்த கண்களால் ரங்கநாதனின் முகத்தை நோக்கியவண்ணம், அவனது கரங்களைப்பற்றினாள். அவர்கள் உள்ளங்களிலே ஆனந்தம் பொங்கியது. உடல்கள் பூரித்தன. அடுத்த வினாடியில் அவனது அரவணைப்பிலே கட்டுண்டு கிடந்தாள் அவள்!

அதே சமயத்தில் அருகிலிருந்த புதரில் ஏதோ சல சலவென்ற சப்தம்; முணு முணுப்பு. அதையவர்கள் கவனிக்கவில்லை. ஆம், கவனிக்கும் விழிப்பு நிலையில் அவர்களிருக்கவில்லை. ''மெய்க்காதல்'' என்ற கப்பலில் ஏறி இன்பம் என்னும் கடலில் உல்லாசமாகச் சென்று கொண்டிருந்தனர். பாவம்! அவர்களுக்குப் பின்புறத்திலிருந்து புறப்படும் கோரமான புயற்காற்று அவர்களுக்குத் தோற்றவில்லை. கப்பல் நிலைக்குமா? அந்த அபலைகளிடம் யார் சொல்லுவது?

4

அந்த வரலாற்றைக் கேட்டதும் கமலாம்பிகையம்மாள்—ரங்கநாதனின் தாயார், மிகுந்த வியப்பும், வருத்தமுமடைந்தாள்.

''அண்ணா! உண்மையில் நீங்கள் பார்த்தீர்களா? என்னால் நம்பமுடியவில்லையே, ரங்கநாதன் அவ்வளவு கேவலமான நிலைமைக்கா வந்துவிட்டான்? உங்கள் வாக்கு பலித்துவிட்டதே! இந்த அசம்பாவிதத்தை அவர் கேட்டால் துடித்துப்போய் விடுவாரே, என்ன அநியாயம்! நம்ம கால் செருப்பு வைக்குமிடத்துக்கு வர யோக்கியதையற்ற சாதியினர். மேலும் பரம தரித்திரங்கள். அவர்களுக்கும் நமக்குமா சம்மந்தம்? நல்ல வேடிக்கை, அண்ணா! இதையெப்படியாவது தடுக்க நீங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும். அவருக்கு என்ன தெரியப்போகிறது? பாவம்! லட்சுமியின்

அதிர்ஷ்டம் எப்படியோ!'' என்று கூறினாள் மிகுந்த கலக்கத்துடன்.

தணிகாசலம் சொல்லுகிறார். ''என்னம்மா; நான் பொய் பேசுவேனா? அவன் அந்த வீட்டுக்குப்போக ஆரம்பித்ததிலிருந்தே வேண்டாமென்று நான் தலையாலடித்துக் கொண்டு வந்தது இதற்குத்தானே, நான் அவ்வளவு மடையனா என்ன? ஏழையின் சொல் அம்பலமேறவில்லை. ஆனால் இப்பொழுது தெரிந்திருக்கும். என்ன செய்வது? வேண்டியவரைக்கும் செல்லங் கொடுத்து வளர்த்துவிட்டீர்கள். இப்பொழுது தலைக்கு மேல் ஏறிவிட்டான். அவர்கள் கொண்டுள்ள பிரியமும், மனவுறுதியும், என்னையே திகைக்கவைத்து விட்டதே! இருக்கட்டும், இதற்கெல்லாம் எனக்கு வழி தெரியும். சாவித்திரியின் மனப்போக்கும், உறுதியும் நிச்சயமாக நமக்குத்துணை செய்யும். எப்படியும் என் மகள் லட்சுமியும், உன் மகனும் ஒரே மணப்பந்தலில் வீற்றிருக்கப் பார்க்கத்தான்போகிறோம், மகிழத்தான் போகிறோம், பாரேன் என்வேலையை.'' தணிகாசலத்தின் பேச்சிலே கர்வமும், கபடமும் தொனித்தன. அண்ணாவின் பேச்சுக்கும், செய்கைக்கும், எள்ளத்தனையும் மாறுதலாகக் கமலாம்பிகையம்மாள் நடந்து கொள்வதில்லை, எனவே அவர் வைத்ததுதான் சட்டம்.

அந்தச் சமயத்திலே வெளியே சென்றிருந்த ரங்கநாதனின் தந்தை அண்ணாமலைப் பிள்ளையும் வந்து சேர்ந்தார். தணிகாசலம் கதையை அவிழ்த்து விட்டார். சாயந்திரம் ஆற்றங்கரைக்குப் போயிருந்ததாகவும் ரங்கநாதனையும், சாவித்திரியையும் அங்கு காணவே, மறைவாக அவர்களைத் தொடர்ந்து சென்று, ஒரு புதரில்மறைந்திருந்ததாகவும், அவர்கள் கல்யாணத்தைப்பற்றியும், அதற்கு உங்கள் சம்மதம் கேட்டு கிடைக்காவிட்டால் வீட்டை விட்டு வெளியேறுவதைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தார்களென்றும், எனவே அதைத் தடுக்கவும், லட்சுமியை சீக்கிரத்தில் ரங்கநாதனுக்கு மண முடிக்கவும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் வெகு அபிநய ஆர்ப்பாட்டங்களுடன் சொல்லி முடித்தார்.

இவைகளையெல்லாம் கேட்ட அண்ணாமலைப்பிள்ளை திகைத்துப்போய் விட்டார். தனது குமாரன் இவ்வளவுக்குத் துணிவானென்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. அதீதமான கவலையினால் அவர் மூளை குழப்பமடைந்தது. அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. நடக்க விருக்கும் சம்பவம் எப்

படியாவது நின்று விட்டால் போதுமென்றுமாத்திரம் நினைத்தார். ஆகவே மனைவியின் யோசனைக்கிணங்கி அது சம்மந்தமான வேலைகளை மைத்துனர் தணிகாசலத்தினிடம் ஒப்படைத்துவிட்டார். தணிகாசலத்தின் வக்ரபுத்தியும் தன் முழுபலத்துடன் வேலை செய்யத் தொடங்கிவிட்டது. ஆம்; எப்படியும் தான் நேரடியாகப் பணக்காரனின் மாமனாராகவேண்டும். செல்வத்துக்கும் தனக்கும் இணைப்புச் சங்கிலியாகத் தன் மகள் பயன்பட வேண்டுமென்பதே அவரது லட்சியம்; அதற்காக அவர் எதையும் செய்யத் துணிந்து விட்டார்.

## 5.

இரவு மணி 10 இருக்கும்; ஊரடங்கிவிட்டது. சற்று முன்பு தான் தனக்குக் கிடைத்த ஒரு கடிதத்தை ஒரு சிறிய அகல் விளக்கின் வெளிச்சத்திலே பிரித்துப்படித்தாள் சாவித்திரி. படித்ததும் அவள் மனம் பகீரென்றது. உடம்பெங்கும் நெருப்பாயெரிந்தது. அவளால் நம்பமுடியவில்லை. கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டாள்; மீண்டும் ஒரு முறை படித்தாள்.

‘‘அன்பார்ந்த சாவித்திரி!

இம்மாதிரி நேருமென்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இன்று மாலையிலே ஆற்றங்கரையிலே, நான் கொடுத்த உறுதிமொழி, பேசியவீராப்பு எங்கனமோ தளர்ந்து விட்டது. மனக்கோட்டைகள் இடிந்து தகர்ந்துவிட்டன. நாம் தம்பதிகளாக வாழக் கொடுத்து வைக்கவில்லை. அதிர்ஷ்டக் கட்டைகள்! பெற்றோரிடம் விஷயத்தைக் கூறினேன். முறையிட்டேன், வீட்டை விட்டுப்போய் விடுவதாகப் பயமுறுத்தினேன். ஒன்றுக்கும் அவர்கள் மசியவில்லை. அவர்கள் வார்த்தையை மீறினால் பின்னால் பெருத்த கஷ்டத்திற்கு ஆளாக நேரிடுமென்று நினைக்கிறேன். எனவே உன்னைக் கைவிடவும், என் மாமன் மகள் லட்சுமியை மணக்கவும் முடிவு செய்து விட்டேன். பரிதாபத்துக்குரிய பெண்ணே! நமது பிரிவைச் சகியாமல் ஏதாவது செய்து கொண்டு விடாதே; என் செய்வது? எல்லாம் விதிப்பயன். மன்னிக்கவும்.

இங்கனம்,
ரங்கநாதன்

சாவித்திரி நெருப்புக் குழியில் கசக்கியெறியப்பட்ட புஷ்பத்தைப் போன்று புழுங்கினாள். அவள் அகம்பதைத்தது. உடம்பு வியர்த்து வழிந்தது. கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாகச் சிந்தியது. அவள் உணர்ச்சியற்ற பதுமையாகத் தோற்றினாள். அவளது அறிவில் ஒரே சுழற்சி, அந்தகாரம்; என்ன செய்வதென்று தோன்றவில்லை. சிறிது நேர யோசனைக்குப் பின் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தாள் அந்த ஏழைப்பெண். ஆம்! பயங்கரமானமுடிவுதான்! எழுந்து நின்று சுற்றிலும் நோக்கினாள். எல்லோரும் அயர்ந்த நித்திரையிலிருந்தனர். தந்தையின் அருகில் சென்று அவரது முகத்தை உற்று நோக்கினாள். "மகளே! உன் எண்ணம் நிறைவேறுமா ?" என்ற வார்த்தைகள் அவள் காதில் ஒலித்தன. அவள் வதனத்திலே ஒரு பயங்கரம்! கண்களிலே மட்டற்ற வெறுப்பு. மெதுவாக ஓசைப்படாமல் அந்தக் குடிசையின் கதவைத் திறந்துகொண்டு அந்த நள்ளிரவிலே வெளியேறி விட்டாள். தெருவில் எவ்வித சந்தடியுமில்லை. அவள் மனம்போன போக்கில் கால்கள் சென்றன.

அண்ணாமலைப் பிள்ளையின் வீட்டுவழியாகச் சென்றுதான் சாவித்திரி குறித்த இடத்தையணுகவேண்டும். எனவே வீட்டுக்குள்ளிருந்து அவள் தெருவில் போவதைப்பார்த்துவிட்ட ஒரு வஞ்சக நெஞ்சம் மகிழ்ச்சியால் பூரித்துவிட்டது. "தொலைகிறாயா?" என்று வாய்க்குள் முணகிக்கொண்டது. அற்பசந்தோஷம் !

## 6.

வீட்டுக்கு வந்தவுடன் பெற்றோரின் நடவடிக்கை சற்று கடுகடுப்பாயும், பேச்சு ஒரு தினுசாகவும் இருப்பதை உணர்ந்துகொண்டான் ரங்கநாதன். ஆற்றங்கரைச் சந்திப்பு அவர்களுக்குத் தெரிந்து விட்டதோ வென்று சந்தேகித்தான். இரவு சாப்பாடு முடிந்தவுடன் எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். ரங்கநாதன் "தகப்பனாரிடம் எப்படி விஷயத்தை வெளியிடுவது? எந்த முறையில் பேச்சைத் தொடங்குவது" என்பதை எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தான். அந்தச் சிரமம் தானாக விலகி விட்டது. அண்ணாமலைப் பிள்ளை ஆத்திரத்துடனும், பதட்டத்துடனும் அவனை நோக்கிக் கூறினார்.

"ரங்கநாதா! என்ன? அந்தப் பிச்சைக்கார நாடாரப் பெண் சாவித்திரியைக் கலியாணம் செய்துகொள்ள முடிவு செய்து விட்டாயாமே! உனக்கு அறிவு மழுங்கி விட்டதா என்ன? அந்தச்சாதியிலா நாம் சம்மந்தம் கலப்பது? அவர்கள் எவ்வளவு கீழான அந்தஸ்திலிருப்பவர்கள்? இந்தப் பாவச் செய்கையை மனத்தாலும் நினைக்கலாமா? மடப் பயலே! குலப்பெருமையைத் தொலைப்பதற்கா துணிந்து விட்டாய்? பேசாமல் என் சொற்படி உன் மாமன் மகள் லட்சுமியை மணந்து கொண்டாலாச்சு, இல்லையேல் வீணாக அழிந்து, குட்டிச்சுவராய்ப்போய் விடுவாய் ஜாக்கிரதை!" அவரது கண்களினின்றும் கோபப்பொறிகள் பறந்தன. ரங்கநாதன் தலைகவிழ்ந்த வண்ணம் மவுனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான், அவன் இருதயம், சக்கரம் போலச் சுழன்று கொண்டிருந்தது.

அப்பொழுது அவன் தாயார் கமலாம்பிகையம்மாள் சற்று அதிகாரத்துடன் கூறினாள்.

"பையனை ஏன் மிரட்டுகிறீர்கள்? அவன் ஏதோ விளையாட்டுப் புத்தியில் சொல்லியிருப்பான், அந்த சின்னச் சாதிப் பெண்ணை மணக்கக்கூடாதென்பது அவனுக்கு மட்டும் தெரியாதோ? உங்கள் வார்த்தையை மீறியா நடக்கப் போகிறான், அவன் ஒன்று மறியாக் குழந்தையல்ல. அதிகமாகப் பேசாதீர்கள்" என்று.

ரங்கநாதனின் மவுனம் கலைந்தது. அமர்த்தலாகவும், ஆத்திரமின்றியும் அவன் கூறினான்.

"அம்மா! நான் அறியாக் குழந்தையல்லவென்பதை நீங்களும் அப்பாவும் ஒப்புக்கொள்வது உண்மையானால் கலியாண விஷயத்திலே எனக்குச் சுதந்திரமளிக்கவேண்டும். பிடிவாதமாக லட்சுமியை என் தலையில் கட்டத் தீர்மானித்து விட்டீர்கள். ஆனால் நாளைக்கு அவளை வைத்துப் பிழைப்பவன் நானென்பதை மறந்து போய் விட்டீர்கள். ஒரு காருண்யமுள்ள பெற்றோரின் கடமையை நீங்கள் உணரவில்லை. பகுத்தறிவற்ற கேவல மனப்பான்மையோடு பார்த்தால்,சாவித்திரி சாதியிலேயிழிப்பட்டவளாயிருக்கலாம்;மிகுந்த ஏழைப் பெண்ணாயிருக்கலாம். என்றாலும் அவளது மேலான குணங்களையும், நடத்தையையும், அறிவையும் நானறிவேன். சாதிச் செருக்கும், பணக்கொழுப்புமான கசு

மாலங்கள் படிந்துள்ள உங்கள் புலன்களுக்கு அவைகளை யறியும் சக்தியில்லை. உங்கள் வார்த்தையை மீறும்படியான நிலைமை ஏற்பட்டதற்கு வருந்துகிறேன், எனினும் இதனா லேயே நான் அழிந்து போகமாட்டேன், உங்களுக்கு என் மேல் வாஸ்தவமான புத்திரவாஞ்சையிருக்குமானால், சாவித் திரியை மண முடித்து என்னை வாழ அனுமதியுங்கள். இல்லையேல் என்னைச் சும்மா விட்டு விடுங்கள். சாவித்திரி யைத் தவிர வேறு பெண்ணை மணப்பதென்பது நிச்சயமாக முடியாத காரியம்.''

ரங்கநாதனுடைய உறுதியான மனப்பான்மையும், அழுத் தமான வார்த்தைகளும், அவர்களுக்குத் திகைப்பையும், வியப்பையும், அத்துடன் சினத்தையும் விளைவித்தன. அவர் கள் ஒருவர் முகத்தை யொருவர் கவலையுடன் பார்த்துக் கொண்டனர்.

அப்பொழுது தணிகாசலம், ரங்கநாதனைப் பார்த்துச் சொல்லுகிறார், கேலிக்குரலில்.

''மாப்பிள்ளை! வீண் பிடிவாதமெதற்கு? விளையாடு கிறாயா? சாவித்திரி யெங்கே இருக்கிறாள்? அவளைத்தான் ஒழித்துவிட்டாயே. அவள் தான் ''உன்னை மணந்து கொள்ள முடியாது'' என்று நீ யெழுதின கடிதத்தைக் கண் டதும், காவிரிக்குப் புறப்பட்டு விட்டாளே! சற்றுமுன் இந்த வழியாகத்தானே போகிறாள், அவள் உன் பிரியப்படி இத் நேரம் அம்மாளோடு ஐக்கியமாய் விட்டிருப்பாள், மணக்க முடியாதென்று அவளுக்குக் கடிதமும் எழுதி விட்டு, அவ ளைத்தான் மணப்பேனென்று இங்கு பெற்றோரையும் மிரட் டுகிறாயே, பேஷ்! உன் சாமர்த்தியமே சாமர்த்தியமப்பா!''

இந்த எதிர்பாராத சமாச்சாரம் ரங்கநாதனின் இருத யத்தைப் பிளந்து, அவன் மூளையைச் சிதறடித்து விட் டது. ''என்ன!? என் சாவித்திரிக்கா? நான் கடித மெழுதி னேனா? காவிரிக்குப் போகிறாளா? ஐயோ! பெருத்த மோசடி! மோசடி!!'' என்று உரக்கக் கூச்சலிட்டான் ரங்க நாதன். அவன் முகத்திலே அளவற்ற பீதியும், பயங்கரத் தோற்றமும் கொழுந்துவிட்டெரிந்தன; கொடிய மிருகத்தைக் கண்டு மிரண்டவன் போல எழுந்தான். யாவரையும் கடுஞ் சினத்துடனும், வெறுப்புடனும் நோக்கினான். அடுத்த

வினாடியில் வாசற்படியை நோக்கிப் பாய்ந்து வெறி பிடித்தவன் போல வெளியே ஓடினான். அண்ணாமலைப் பிள்ளையும், கமலாம்பிகையம்மாளும், திகைத்து வெல வெலத்து விட்டனர். தணிகாசலத்திற்கும் உதைப்புத்தான்.

"அண்ணா! உங்கள் யுக்தி விபரீதத்தில் முடிந்துவிடும் போலிருக்கிறதே! சாவித்திரியை இவ்வளவு பலமாக நேசிக்கிறான் என்பதை அறியாமல் போய்விட்டேனே! உங்கள் பொய்க் கடிதம் அவனை மடியவைத்திருந்தால், என் மகனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறதே. ஐயோ! அண்ணா, நானென்ன செய்வேன்! என் மகன் எங்கு போகிறானோ! போய்ப் பாருங்களேன்! நீங்களுந்தான் போங்களேன்!" என்று அங்கலாய்த்து, கதறினாள் கமலாம்பிகையம்மாள்.

அண்ணாமலைப் பிள்ளையும், தணிகாசலமும், மிக்க சஞ்சலத்துடன் ரங்கநாதனைத் தேடப்புறப்பட்டனர்.

7.

சோலைமுத்து நாடாரின் குடிசைக்குச் சென்ற ரங்கநாதன் சாவித்திரி அங்கு இல்லையென்பதை உணர்ந்தான், அவனது நிலைமை தலைகீழாகப் புரண்டுவிட்டது. காவிரியாற்றின் படித்துறையை நோக்கித் தலைதெறிக்க ஓடினான். சோலைமுத்து நாடாருக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. ஆனால் சாவித்திரி வீட்டிலில்லை யென்பதையறிந்ததும் திடுக்கிட்டுப்போய்விட்டார். ரங்கநாதன் வந்து விசாரித்த தோரணை அவரை மேலும் குழப்பத்திலாழ்த்தியது. அவரும் காவிரியை நோக்கி வேகமாக நடந்தார். விழித்துக் கொண்ட அவரது மனைவியும், மற்ற இரு பெண்களும், ஊமையனைத் தேள் கொட்டிய மாதிரி என்னென்ன வெல்லாமோ நினைத்துப் பிதற்றி வருந்திக்கொண்டிருந்தனர்.

பால் போன்ற நிலவொளியில் காவிரி வெண்துயிலணிந்து உறங்குவதைப் போலிருந்தது. பெரு வெள்ளத்தின் "ஹோ" வென்ற பேரொலிப்பு ரங்கநாதனின் உள்ளத்திலே அழுகை யொலியை ஞாபகமூட்டிற்று. அவன் தூரத்தில் போகும்பொழுதே, படித்துறையை அடுத்து கொஞ்ச தூரத்திலே, ஆற்றின் உள்புறத்திலே நீண்டிருக்கும் ஒரு பெரிய

பாறையுச்சியில் ஒரு மனித உருவம் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. "ஆம், என் சாவித்திரிதான்!" என்று சந்தோஷ மிகுதியால் உரக்கக் கூவினான் ரங்கநாதன். காலின் வேகம் துரிதமடைந்தது. இருதயம் அந்தப் பாறையைத் தாவியது. பறப்பதற்குச் சிறகில்லையே!

ஆச்சு, இன்னும் சில கஜதூரந்தான். அவ்வளவுக்கு அருகில் நெருங்கிவிட்டான். "சாவித்திரி! நில்!" என்று கூற வாய் திறந்தான். ஆனால் பெருத்த ஏமாற்றம். அதேசமயத்தில் அவள் பாறையின் கீழ் கோஷமிட்டுக் கொந்தளிக்கும் பெருஞ் சுழலில் தொப்பென்று குதித்துவிட்டாள்! அதனின்றும் எழுந்த சப்தம் கனவேகத்துடன், ரங்கநாதனின் நெஞ்சத்தில் புகுந்து அவனது உயிரையே குடித்துச் சென்றது. அவன் வெறும் நடைப் பிணமாக, உயிரற்றபதுமையாக அந்தப் பாறையின் உச்சியில் ஏறி நின்றான். விவரிக்க முடியாத உணர்ச்சிகளால் அவனது புலன்கள் யாவும் மறந்துவிட்டன. அவனது அழகிய வதனத்திலே சவக்களை இடம் பெற்றது. அவன் தன்னை மறந்தான். தனக்குப் பின்புறத்தில் வேகமாக நெருங்கிவரும் ஒரு மனிதக் கூட்டத்தை அவன் லட்சியம் பண்ணவில்லை. உண்மையாகவே அவனுக்கு வெறிபிடித்துவிட்டது. அந்தச் சுழலை வெறித்து நோக்கினான். அந்த ஏழைப்பெண் சாவித்திரி, தனது உடம்பின், உயிரின் வாழ்க்கையின் சரி பகுதி—காதற்கனி, புன்னகையுடன் அவனையங்கு அழைப்பதுபோல் தோன்றிற்று. "சாவித்திரி! இதோ வந்தேன்!" என்று பயங்கரமாகக் கூவினான். மறுகணம் காண்டீபத்தினின்றும் விடுபட்ட அம்பைப்போல அந்தச் சுழலை நோக்கிப்பாய்ந்துவிட்டான் ரங்கநாதன். என்னே கோரம்!

ஓடிவந்த மனிதக்கூட்டம் அப்படியே திகைத்து நின்றது. அந்தப் பகுத்தறிவற்ற அசட்டுக் கும்பலைப்பற்றி யாருக்கென்ன கவலை?

அந்த இளங்காதலர்களைக் கூட்டுவிக்கப் பழங் குள்ளர் நிறைந்த சமுதாயம் மறுத்துவிட்டது. ஆனால் காவிரி எவ்வளவு அன்போடு அவர்களை அணைத்துக்கொண்டாள்!

---

# "சங்கராசார்ய சுவாமிகளும்"
# மலையாளமும்.

(கைவல்ய சாமியார் எழுதுவது.)

—)0(—

ஆதி சங்கராசார்ய சுவாமிகள் மலையாளத்தில்நம்பூதரி என்னும் மலையாள பிராமண ஜாதியிற் பிறந்தவர். இவர்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். ஆதி சங்கரர் சில மடங்களை ஏற்படுத்தினார். யோக்கியதையுடைய உத்தமர்களைச் சந்நியாசிகளாக்கி அந்த மடங்களில் நியமித்து மத விஷயங்களை ஜனசமூகத்திற்குப் போதிக்கும்படியாய் ஏற்பாடு செய்து சொர்க்கத்தை அடைந்தார்என்பதுகதை. அதற்குப் பின்வரிசைக்கிரமமாக ஒவ்வொருமடத்துச்சந்நியாசிகளும் ஒவ்வொருபையனை ஸ்வீகாரமெடுத்துச் சந்நியாசிஆக்கிவிட்டு காலமாவார்கள். இவர்களுடைய குண விசேடங்களும், அனுபோகங்களும், எப்படியிருந்தாலும் ஆதியில் இவர்களை சங்கரருடைய ஸ்தானத்திலிருப்பவர்களென மதித்து எல்லா மரியாதைகளுக்கும்உரியவர்களாக்குவார்கள். பணக்காரன்வீட்டிற்குப் பங்காளிகள் ஸ்வீகாரம் கொடுப்பதற்கு முந்துவதுபோல் சங்கராச்சாரி மடத்திற்குப் பிள்ளையைக் கொடுப்பதிலும் போட்டியுண்டு, தந்திரமுண்டு, செல்வாக்குண்டு. மந்திரியும் மற்ற பதவிகளும் வந்தவுடன் அவர்கள் கூட்டமும் கட்சியும் பதவிக்கு ஓடி புகழ்ந்து திரிவது போல் ஸ்வீகாரப் பிள்ளையினுடைய பந்துக்கூட்டங்கள் மடத்திலுள்ள அதிகாரங்களையும் சுகங்களையுமடையகூவந்து சேர்ந்து கொள்ளுவார்கள். ஸ்வீகாரப் பிள்ளையான சங்கராச்சாரி சமஸ்கிருத பாஷையைப் படித்து வேதம் படித்து பாராயணஞ் செய்வார். ரிக் வேதமான முதல் வேதம், ஸ்தோத்திரங்களாலே நிறையப்பெற்றது. இரண்டாவது வேதமான யஜுர் வேதம் யாக சம்பந்தமான மந்திரங்களையுடையது. மூன்றாம் வேதமான சாம வேதம் யாக காலத்தில் கானம் பண்ண வேண்டிய விதிகளும் சோமயாகத்தில் கானத்திற்கு

அவசியமான சுலோகங்களுமுடையது. நாலாம் வேதமான அதர்வண வேதத்தில் மற்ற மூன்றிலுமுள்ள மந்திரங்களும் யோக சித்திக்கு வேண்டிய மந்திரங்களும் அடங்கியிருக்கும். இந்தக்காலத்தில் இவையனைத்தையும் பாடஞ்செய்வதில்லை. அவசியமுமில்லை. ஏனெனில் யாகக் கிருத்தியங்கள் இந்தக் காலத்தில் செய்வதில்லை. சங்கரபாஷியத்தைஒருவாறு பார்த்தும் ஆங்காங்குச் சில சுலோகங்களைப் பாடங் கேட்பார்கள். பழைய வைதீகப்படிப்பாயிருக்குமே ஒழிய அனுபோகத்திற்கு உபயோகப்படும்படியான ஆராய்ச்சிக்குத்தகுந்த மாதிரியில்கற்றுக்கொடுப்பதில்லை. இவர்களைச் சுற்றியும் வைதீகக் கோஷ்டிகளிலிருந்து கொண்டு அவர்களுடைய குறுகின சுபாவங்களையும் மதத் துவேஷங்களையும் ஜாதி உயர்வு தாழ்வுகளையும் கற்பிப்பார்கள். உலகத்தில் நடக்கும் சங்கதி இவர்கட்குத் தெரியாது. குருவான சங்கரர் எதற்காக அவதாரம் பண்ணினார்? என்பதை இவர்கள் கவனிப்பதில்லை. மலஜல உபாதை நீக்குதல்; குளித்தல்; சில மந்திரங்களைச் சொல்லி ஜெபித்தல்; பூஜை செய்தல்; பாதகாணிக்கையும் தட்சணையும் கொண்டு வருகிறவர்கள் பூஜையையும் மரியாதையையும் பெற்றுக்கொள்ளுதல்; பிரசாதங் கொடுத்தல்; உண்ணல்; படுத்தல்; அத்துவைத கொள்கையின் சுலோகங்களைச் சொல்லி அர்த்தஞ் செய்வது; பின் எந்த ஊருக்குக் காரியஸ்தர்கள் புறப்படச் சொல்லுகிறார்களோ அந்த ஊருக்குப் புறப்படுவது; இதுவே இவர்கள் நிலை. பண்டைக்காலத்தில் இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட மதங்களே இருந்தமையால் சங்கரருடைய வேதாந்த மதத்திற்கு எல்லாம் அடங்கி விட்டது. உலக தத்துவமான ஆராய்ச்சிகள் அந்தக்காலத்தில் இவ்வளவு பரவவில்லை. சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தின் கொள்கைகளை உலக இயற்கைத் தத்துவங்களுக்குஒத்துபிரசங்கஞ்செய்தபடியால் மேனாட்டுத் தத்துவ ஆராய்ச்சிக்காரர்களும் நம் மதத்திற்குச் செவிசாய்த்தார்கள். இவர் நம்பூதரி பிராமணனானதால் காசிக்குப் போயுங்கூட தீண்டாமை இவரை விட்டு விடவில்லை. காசி விஸ்வநாதரே பறையனென்று சொல்லப்படுபவராக வந்து தீண்டாமை இவரை விட்டுத்தொலைய உபதேசஞ் செய்தார் என்பது இவர் சரித்திரத்திலொன்று. சங்கருடைய அபாரபுத்தி வன்மையும், இராமநுஜருடைய மோட்ச துவாரத்தை பிராமணனுக்கும் பறையனென்று சொல்லப்படுபவனாகிய திரியக்கு ஜாதிக்கும் பேதமின்றி திறந்து விட்ட கருணாசாகரமென்னும் அன்பும் நம் தேசத்தைப் பிரகாசிக்

கச்செய்து கொண்டிருக்கிறன என்பதும் நாம் பாராட்டிக் கொள்ளும் பெருமையாகும்.

செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, வயிறு பிழைக்கும் பந்துக் கூட்டத்தினால்சூழப்பட்டு "அப்பா, சாமி, அய்யா, துரையே, எஜமான்" என்னும் பேரையேகாதில் கேட்டு வளர்ந்த பிரபு வீட்டுப் பிள்ளைகளுக்கு உலகபுத்தியும் குடும்ப லாப நஷ்டமும் எப்படித் தெரியாதோ அதுபோலவே இந்த சங்கராச்சாரிகளுக்கும் தங்கள் மதத்தினுடைய சீர் கேடும் காரியஸ்தர்களுடைய ஞாயமில்லாத ஏற்பாடுந் தெரியாது. குரு பிறந்த இடமான மலையாளத்தில் தான் இந்து மதத்தின் நாசத்திற்குப் பாலக்கால் போட்டு வருமிடம். நான் சொல்லுவது சிலருக்கு வருத்தமாகவும் துவேஷ வார்த்தையாகவுமிருக்கலாம். மாப்பிள்ளைமார் கலகத்தில் இதன் உண்மை சிலருக்குத் தெரிந்திருக்கும். இதே நிலைமையில் தீண்டாமை இருக்குமானால் நான் சொல்லுவதின் உண்மையை நமது பின்னோர்கள் அனுபோகத்தில் தெரிவார்கள். மலையாளத்தைப்பற்றி விரிவாக இன்னொரு சமயமெழுதுவோம். மலையாளத்து பிராமணனுக்கு நம்பூதரி என்று பெயர். குடும்பத்தில் பெரியவனுக்கே விவாகம். மற்ற சகோதரர்கள் நாயர் ஜாதிப் பெண்களை வைப்பாக வைத்துக்கொள்ள வேண்டியது. இதை வைப்பாட்டி என்று சொல்லுவதில்லை. சம்மந்தமென்று சொல்லுவார்கள். தமிழ் நாட்டுப் பிராமணரும் அங்கு குடியேறி பிராமணன் என்னும் பாத்தியதையால் நாயர் ஜாதிப் பெண்களைச் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மலையாள ராஜ குடும்பங்களில் நம்பூதரியும் சில பெரிய குடும்பங்களில் பிராமணனும் தவிர, வேறு யாரும் சம்பந்தம் செய்யக்கூடாது என்று நிச்சயமாயிருக்கிறது. நம்பூதரி பிராமணர்களாலும் தென் தேசத்துப் பிராமணர்களாலும் மலையாளத்தில் அநேக ஞாயமில்லாத ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவர்களுடைய அதாவது பிராமண ஆண்களுடைய விபசாரத்திற்கு மலையாளம் கடவுளாலேயே, சிருஷ்டிக்கப் பட்டதாகக் கருதப்பட்டு வருகிறது. இவர்கள் விபசாரத்தால் ஏற்பட்ட சில கூட்டத்தைத் தங்களுக்குக் கீழ் தனிச் சாதியாக ஏற்படுத்தியும் வைத்திருக்கிறார்கள். மதமும், கடவுளும், இதற்கும் பிராமணனுக்கே உரிமையானது என்னும் பிரமையே ஜனங்கள் இந்த அக்கிரமத்தைத் திருப்தியோடு கைக்கொள்ள காரணம். இங்கிலீஷ் படிப்பு அதிகம்

பரவிவருவதால் அக்கிரமங்களுக்கு சில தடைகள் ஏற்பட்டு வருகின்றன. மலையாளத்தில் பிராமணன், நாயர் ஸ்திரீயை "சூத்திரச்சி" என்பதாலும் நாயர் தங்களைச் சூத்திரன் என்று சொல்லிக் கொள்ளுவதிலும் பெருமையடைகிறார்கள். இங்கு பிராமணன் முன்னமேயே ஏற்படுத்தி வைத்திருக்கும் புரட்டு மிகவும் கொடுமையானது. அதாவது பிராமணனுக்குப் பிறக்கும் குழந்தைகளை இவன் காப்பாற்ற வேண்டுவதில்லை. அவசியமுமில்லை. குழந்தையின் மாமன் காப்பற்ற வேண்டும். தகப்பன் சொத்தில் குழந்தைக்கு யாதொரு பாத்தியதையுமில்லை. இப்படியே சாஸ்திரத்திலும் எழுதி வைத்தார்கள். அந்தச் சாஸ்திரத்தை அனுசரித்தே பிராமணனுடைய வைப்பாட்டி மகனுக்குத் தகப்பன் சொத்தில் யாதொரு பாத்தியதையும் இல்லை என்று இங்கிலீஷ் சட்டமும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் புரட்டுச் செவ்வையாக நடக்கவே, மலையாளத்தில் மருமக்கள் தாயம் ஏற்படுத்தினது. அதாவது சொத்துக்குப் பாத்தியதை மருமகன். வேத சாஸ்திரங்களில், "பிராமணனால் சூத்திர ஸ்திரீயிடம் பிறந்த குழந்தையின் சந்ததி உலகத்திலுள்ள வரையிலும் உண்டுபண்ணின பிராமணனும் அவன் சந்ததிகளும் முன்னோர்களும் நரகத்தில் கிடப்பார்கள்" என்றிருக்கிறது. இதை நிச்சயம்பண்ண அநேக கதைகளும் சொல்லப்படுகின்றன.

உதாரணமாக கோவிந்தாச்சாரி என்னும் பிராமணனால் சூத்திர ஸ்திரீயிடம் பிறந்தவர் பர்த்ருஹரி. கோவிந்தாச்சாரி சாகுந்தறுவாயில் பர்த்ருஹரியான மகனிடம், "நீ சந்ததியை உண்டுபண்ணக்கூடாது. உண்டுபண்ணினால் நானும் என் முன்னோர்களும் நரகத்தில் கிடப்போம். நீ விவாகம் செய்யப்படாது" என்னும் வாக்குறுதியை வாங்கி இறந்தார். அதன் பிரகாரம் பர்த்ருஹரி விவாகஞ் செய்யாமல் வைராக்கிய சதகம், சிங்கார சதகம், நீதி சதகம் என்னும் நூல்களைச் செய்து ஞானத்தையடைந்தார் என்பது கதை. இந்தமாதிரி அநேக கதைகளும் அதற்குத் தகுந்த நூல்களுமிருக்கின்றன. எந்த பிராமணன் அந்நிய ஸ்திரீ சம்சர்க்கம் வைத்துக்கொண்டிருக்கிறானோ அவன் சண்டாளனாகிறான் என்பது சாஸ்திர விதி. சாஸ்திரமே பிராமணன் உயர்ந்தவன் என்பதற்குப் பிரமாணம். அந்தச்சாஸ்திரப் பிரகாரம் பார்க்கையில் மலையாளத்தில் பிராமணன் என்று சொல்லத்தக்கவன் எவன் இருக்கிறான்? சாஸ்திர சம்மதமான சண்டாளரிருக்

கும் வீதியில் சாஸ்திரம் சம்மதிக்காத—சண்டாளத் தன்மையற்ற ஈழுவர் தீயர் என்னும் மலையாளத்திலுள்ள ஒரு பெரும் வகுப்பார்களும் மற்றுமுள்ள தாழ்ந்த ஜாதியார் என்பவர்களும் போகக்கூடாதாம். அநேக மலையாளத்துப் பார்ப்பனர்கள் பம்பாய், கல்கத்தா, ரங்கூன், பினாங்கு முதலிய இடங்களில் பல தொழில் செய்து பிழைக்கிறார்கள். இவர்கள் செய்யும் தொழிலெல்லாம் பிராமணன் செய்வானானால் சண்டாளத்தன்மை அடைவான்என்று பிராமணனுக்கு எந்தச் சாஸ்திரம் பெரிதோ அந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. சங்கரன், மாதவன், வேலன், கிருஷ்ணன், அச்சுதன் என்னும் நம்மதப் பெயர்களை வைத்துக்கொண்டு நம்மதத்தையே. அனுசரித்துப் பிராமணனையே, குருவாக நினைத்து வருகிறவர்களை வீதியில் விடுவதில்லை. கோயில் மதிலைத் தொடப்படாது என்று ஓட்டுகிறார்கள். அவன் அந்நிய மதத்திற் சேர்ந்து பெயரை மாற்றிக்கொண்டால் வீதியில் வரலாம்; கோவிலுக்குள் வரலாம். இதை நினைக்கையில் இந்து மதத்திற்கும் குருவான சங்கராச்சாரிக்கும் என்ன பெருமையிருக்கிறது? "சங்கராச்சாரி வந்தார்; மழை பெய்தது. அவர் வந்ததே அந்த ஊருக்குப் பாக்கியம்" என்று பார்ப்பனப்பத்திரிகைகள் எழுதி ஜனங்களை இன்னமும் ஏமாற்றுகின்றனவே ஒழிய, அவர் இருந்த ஊரில் பெய்த மழை அவர் போகாத ஊரிலும் பெய்திருக்கிறதே, இவர் வந்துபோன ஊரில் குடிக்கக்கூடத் தண்ணீரில்லையே என்று ஒருவரும் யோசிப்பதில்லை. இந்தப்பித்தலாட்டம் சகிக்காமலே மலையாளத்தில் அந்நியமதத்தில் அநேகர் சேர்ந்துவிட்டார்கள். மதச்சச்சரவு ஏற்படுகையில் அந்நியமத வைராக்கியமும் நாம் முன் செய்திருக்கும் கொடுமையும்இரண்டுஞ் சேர்ந்து, நம்மை ஊரைவிட்டு ஓடச்செய்து வெள்ளைக்காரன் காலில் விழச் செய்கிறது. மாப்பிள்ளை என்னும் மகம்மதியர் கலகத்தை ராஜாங்கத்தார் தடுக்காவிட்டால் மலையாளம்மட்டுமல்ல, தமிழ் நாடும் என்ன பாடுபட்டிருக்குமென்பது ஆலோசித்தால் விளங்கும். குருஸ்தானங்களும் அதைச் சுற்றியிருக்கும். வயிறு பெருத்தவர்களும், நானும், சாது ஜனங்களையும், கோவிலையும் காப்பாற்ற எப்படி முடியும்? தடுக்கச் சக்தியுடையவர்களெல்லாம் அந்நிய மதத்திற் சேர்ந்து கொள்ளுகிறார்கள். தாழ்ந்த ஜாதியார்களே மத வைராக்கியமும் துணிவுமுடையவர்கள். நம் கொடுமை இப்படியே இருந்தால், இவர்களெல்லாம் அந்நிய மதத்தில் சேர்ந்துவிடுவார்கள். இதற்கெல்லாம் காரணமான

# ரஷ்யாவில் சிறுவர்கள்.

(தோழர் கபிலகந்துவாலா)

(சென்ற மாதத் தொடர்ச்சி)

ரஷ்யாவில் சிறுவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள சிறுவர் விடுதிகளின் உள்ளமைப்பு மிகவும் உன்னதமாயிருக்கும். அவைகளின் உட்புறத்தில் கண்களைக் கவரும் அழகிய சிறு பந்துகள் பல வர்ணங்களோடு எங்கும் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. சுவர்களில் சித்திரங்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. விளையாட்டுக் கருவிகள் ஏராளமாக இருக்கின்றன. அழகிய மீன்கள் சிறு சிறு தடாகங்களில் விடப்பட்டிருக்கின்றன. இன்னும் சிறுவர்களுக்குரிய பல சாமான்கள் எங்கும் நிறைந்திருக்கின்றன. தரை எங்கு பார்த்தாலும் மிகவும் நேர்த்தியாயும் சுத்தமாயும் இருக்கிறது.

அனேகமாக எல்லா விடுதிகளும் அழகிய கண்காட்சியை யாவருக்கும் அளித்து வருகின்றன. சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையில் இயற்கையழகையும் செயற்கையழகையும் அதிகமாக நேசிக்கும் தன்மையை இவ்விடுதிகள் ஊட்டி வருகின்றன.

---

பிராமணன் திருத்தமடைய வேண்டுமென்று "குடி அரசு" சொன்னால் கோபப்படுகிறார்கள். கொஞ்சகாலத்துக்கு முன் அரித்துவாரம் இந்துமாகா சபை ஸ்பெஷல் மீட்டிங்கில் மாளவியாவிற்குப் பதிலாக சபா நாயகராக விருந்து பண்டிதர் தேவரத்தினா அவர்கள் செய்த பிரசங்கத்தில், "பிராமணர்களால் இந்து மதம் க்ஷீணித்துப் போகிறது" என்றார். இப்பேர்ப்பட்ட படித்த மேதாவிகளின் வாக்கையும், அனுபோகத்தையும், கவனித்தாகிலும் இப்போதைய சங்கராச்சாரியார் என்னப்படுபவர்களும் பிராமணர்களும் நடந்து கொள்வார்களா?

அங்குள்ள விடுதிகளில் ஒன்றைப்பற்றி அது எவ்வாறு இருக்கிறது, அதன் அலுவல்கள் எவ்வாறு நடக்கிறது என்பதைக் குறித்து நான் விவரித்துக் கூறுகிறேன். ஏனைய விடுதிகளும் இதே மாதிரியில்தான் இருந்து வருகின்றன. கட்டிடம் அழகிய திட்டத்தோடு கட்டப்பட்டிருக்கிறது. அறைகள் உயரமாயும், அகலமாயும், போதுமான இடவசதியுடனும், காற்றும் வெளிச்சமும் ஏராளமாக உட்புகத்தக்க வசதிகளுடனும் இருந்து வருகின்றன. சிறுவர்கள் வயதிற்கு ஏற்றவாறு உள் நுழைய வாயில்கள் அமைத்திருக்கிறார்கள். தனித்தனியாக உபசரிக்கும் அறைகளும் குளிக்கும் அறைகளும், ஆடைகளை சுத்தம் செய்ய நீர்நிலைகளும், இலேசான ஆகாரங்கள் தயார் செய்யக்கூடிய சமையல் அறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்கள் நித்திரை கொள்ளும் அறைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக வராந்தா இருக்கிறது. ஒவ்வொரு விடுதிக்கும் சமையல் செய்யக்கூடிய பொது சமயலறை ஒன்றும் சலவைச்சாலை ஒன்றும் இருந்து வருகின்றன. இது தவிர ஒரு தோட்டமும், விளையாட்டு மைதானமும் இருக்கின்றன. விடுதிகளைக் கண்காணிப்போர்களில் பெரும்பாலோர்—ஏன் எல்லோருமே தேர்ச்சிபெற்றவர்களே. அதிலும் மருத்துவக் கல்வியில் தேர்ச்சிபெற்றவர்களில் பெரும்பாலர் அங்கு காணப்படுகிறார்கள். சிறுவர்களை 12 முதல் 15 பேர்களுக்குள் அடங்கிய தொகையினரைக்கொண்ட கூட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு கூட்டத்தையும் பயிற்சிபெற்றவர்கள் கவனித்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவியாக ஒவ்வொரு பயிற்சியற்றவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் குழந்தைகளைப் பராமரிக்கப்பழக்கப்படும் ஒரு பயிற்சிசாலையென்றே சொல்லவேண்டும். ஏனெனில் ஒவ்வொரு விடுதியிலும் பெற்றோர்களைக் கொண்டு பிள்ளைகளைக் குறித்த அறிவு வெளிப்படுத்தப்படுகிறது.

விடுதிகள் ஒரே மாமூல்படி நடத்தப்பட்டு வருகின்றன. தாய்மார்கள் வேலைக்குப் போவதற்குள் காலையில் தங்கள் குழந்தைகளை இவ்விடுதிகளில் கொண்டு வந்து விடுகிறார்கள். உபாத்தியாயர்களாலோ, நர்சுகளாலோ அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். உடனே அச்சிறுவர்களை வைத்திய பரிசோதனை அறைக்குக் கொண்டு போகிறார்கள். அங்கு அவர்கள் சரிவர பரிசோதிக்கப்படுகிறார்கள். அதற்குப்பின் குளிப்பதற்கு அனுப்பப்படுகிறார்கள். குளித்தவுடன்

மாற்றிக் கொள்ளவேண்டிய ஆடைகளுடன் தனித்தனி அறைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இவ்வறைகளில்தான் இச்சிறுவர்கள் குளிக்கஅனுப்பப்படுகிறார்கள். விடுதிகளால் கொடுக்கப்படுகிற சுத்தமான ஆடைகளையே ஒவ்வொரு குழந்தையும் குளித்தவுடன் அணிந்து கொள்ளுகின்றன. உடனே காலைப் போஜனம் அளிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு வயதிற்கேற்றபடி பிரிக்கப்படுகிறார்கள். நடக்க முடியாத இளங்குழந்தைகள் படுக்கைகளில் வைக்கப்படுகிறார்கள். ஊர்ந்து விளையாடும்--உட்காரும் குழந்தைகள் கல்விக்கு சம்பந்தமான உயரிய முறையில் தயாரிக்கப்பட்ட விளையாட்டுப் பொருள்களால் நன்கு அமைக்கப்பட்ட அறைகளில் விடப்படுகிறார்கள். காலையில் இரண்டுமணி நேரம் திறந்த வெளியில் அவர்கள் பொழுது போக்குகிறார்கள். 2 அல்லது 3 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வீதியில் சில பெரியவர்களோடு நடந்து போவதைக்காண மிகவும் சந்தோஷமாயிருக்கும். அவர்களின் அனுபவத்தையும் எதையும் உற்றுக் கவனிக்கும் தன்மையையும் விருத்தி செய்வதற்கே இம்முறை கையாளப் படுகிறது. இது முடிந்ததும் அவர்கள் முகம், கால், கை முதலியவற்றை சுத்தஞ்செய்கிறார்கள். பின்புஉடனேசாப்பாடு அளிக்கப்படுகிறது. அதற்குப் பின் 2 மணி நேரம் தூங்குகிறார்கள்.விழித்தெழுந்தவுடன்ஒருகோப்பை பால்கொடுக்கப்படுகிறது. அறைகளிலே சில விளையாட்டுகள் விளையாடுகிறார்கள். தாய்மார் வர நேரமானால் டீயும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இத்துடன் அவ்விடுதியின் ஒரு நாளைய வேலை முடிவுறுகிறது. இரவில் வேலை செய்யும் தாய்மார்களின் குழந்தைகள் தங்குவதற்கும் இவ்விடுதிகளில் இடவசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அறைகளிலே குழந்தைகள் விளையாடுவதற்கு உபயோகப்படுத்தப்படும் விளையாட்டுக் கருவிகள் நமது நாட்டில் கிண்டர்கார்ட்டன், மான்டிசாரி பள்ளிக்கூடங்களில் உபயோகப்படுத்தப்படுகிற உபகரணங்களேயாகும். அவர்களின் நோக்கமும் அறிவிற்குப் பயிற்சி கொடுப்பதேயாகும். அறைகள் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. இட வசதியும் வெளிச்ச வசதியும் ஏராளமாக இருந்து வருகின்றன.

குழந்தைகளின் தேக சுகத்தைக் குறித்தும் வியாதிகளைத்தடுக்கும் விதத்தைக் குறித்தும் அதிககவனம் செலுத்தப்பட்டு வருகிறது அவ்விடுதிகளில் வேலைசெய்யும் ஆட்கள் வெண்துயிலையே அணியவேண்டும். விடுதிகளைப்

பார்வையிடப் போகிறவர்களும் வெண்மை ஆடையை அணிந்திருத்தல் வேண்டும். குழந்தைகளுக்குப் பால் கொடுக்க வரும் தாய் மார்களும் அத்தகைய ஆடைகளையே அணிந்திருத்தல் வேண்டும். குழந்தைகளுக்குப் பால் கொடுக்குமுன் தங்கள் ஸ்தனங்களை வெந்நீரால் சுத்தஞ்செய்து கொள்ளவேண்டும். வெவ்வேறு வகுப்பாருக்குத் தனித்தனியான அறைகள் இருந்து வருவதாலும் டாக்டர்கள் அடிக்கடி பரிசோதித்து வருவதாலும் தொத்து நோய்கள் அங்கு பரவாமல் இருந்து வருகின்றன. இவ்விதமான சுத்தம் சாதாரணமாக சகல விடுதிகளிலும் இருந்து வருகிறது. ஏதோ சில இன்னும் இந்த அளவுக்கு வரவில்லை.

சோவியத் ரஷ்யாவில் மற்றொரு விதமான விடுதிகள் இருந்து வருகின்றன. இவ்விடுதிகள் பெரிய ரயில்வே ஸ்டேஷன்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய விடுதிகள் எல்லாம் புதியவைகளே. ஆதலால் எல்லாம் பூரண சௌகரியங்களோடு பொருந்தியதென்று சொல்வதற்கில்லை. சில பெரிய ஜங்ஷன்களில் பிரயாணிகள் ஒரு நாளோ இரண்டு நாளோ தங்கவேண்டி நேரிடுகிறது. அக்காலத்தில் அவர்களுடைய சிறுவர்களுக்கு சுற்றுப்புறங்களில் போதிய வசதிகள் இருப்பதில்லை. அங்குதான் இவ்விடுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சுவர்களைச் சுற்றி கட்டில் போடப்பட்டிருக்கின்றன மத்தியில் பலவிதமான விளையாட்டுச் சாமான் வைக்கப்பட்டிருக்கின்றன. அறைகள் மிக விசாலமானதாயிருக்கின்றன. காற்று தாராளமாக உட்புகக்கூடிய விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அனேக குளிக்குமறைகளும் இருக்கின்றன. குழந்தைகளுக்கு ஏற்ற ஆகாரம் கொடுக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற ஊழியர்கள் கல்வியும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

விடுதிகள் ஏற்படுத்தாத இடங்களில் அந்தந்த பருவத்துக்கேற்றவாறு குழந்தைகள் விளையாடுவதற்கு மைதானங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பழய முற்றங்களும் கோவில் பிரகாரங்களும் இன்று விளையாட்டு மைதானமாக்கப்பட்டிருக்கின்றன. புல் தரைகளும், புஷ்பப் பாத்திகளும், சிறு குன்றுகளும், சிறு ஏரிகளைக் கடந்து செல்ல பாலங்களும், நீரில் விளையாட சிறு தடாகங்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். வெயிலுக்கும், மழைக்கும், பனிக்கும் தங்குவதற்கு ஒதுக்கிடமும், மழை காலத்தில் ஆகாரம் கொடுக்க வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. சோவியத் பெண்களின் குழந்தைக

ளிடத்தில் உள்ள அன்பின் அறிகுறியாகவே இவ்விதவிடுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம்.

இவ்விடுதிகள் ஆரம்பித்த வேலையை இளைஞர்கள் பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்துக்கொண்டிருக்கின்றன. இவைகளில் சில அவ்வளவு முற்போக்கடையவில்லை. ஆனால் அவைகளும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் 75 முதல் 80 வரை பிள்ளைகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 3 பிரிவாகப்பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். முதல் பிரிவில் 4 முதல் 5 வயதிற்குட்பட்டவர்கள். 2-வது பிரிவில் 5 முதல் 6 வயதிற்குட்பட்டவர்கள். 3-வது பிரிவில் 6 முதல் 7 வயதுக் குட்பட்டவர்கள். அதை மேற்பார்வை யிடுவதற்கும் பரிபாலிப்பதற்கும் டைரக்டர் ஒருவரும் 6 உபாத்தியாயர்களும், ஒரு கலைஞனும், ஒரு உடல்கூற்று அறிஞரும், 4 தோழிகளும், ஒரு சமையல் ஆளும், ஒரு சலவைத்-தொழிலாளியும், ஒரு கையாளும், இரவில் வேலை பார்ப்பதற்கு 3 பேர்களும் ஆக 20 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இளைஞர்கள் படிக்கும் பள்ளிகளில் கல்வி கற்பிக்கப்படுவதால் டிபார்ட்மெண்டில் இருந்து உதவியளிக்கப்பட்டு வருகிறது. மற்ற விடுதிகள் தொழிற்சாலைகளாலும், கிளப்புகளாலும் மற்ற ஸ்தாபனங்களாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலே கூறிய ஸ்தாபனங்களில் வேலை பார்க்கும் பெற்றோர்களின் குழந்தைகளுக்காக இத்தகைய விடுதிகளை பராமரித்து வருகின்றனர்.

அங்குள்ள இளைஞர் பள்ளிகளில் காற்றோட்டம் உள்ள இளைப்பாறும் அறைகள் உண்டு. அங்கு குழந்தைகள் தூங்கலாம். கண்ணைக் கவரக்கூடிய அறை ஒன்று உண்டு. அதில் குழந்தைகள் வாசிக்கின்றன. ஒரு புத்தகசாலையுமுண்டு. இளம் வயது முதற்கொண்டே புத்தகங்களை வைத்துக் காப்பாற்றும் விதமும் அதனிடத்தில் ஒரு விதமான ஆசையும் உண்டாக்கவேண்டும் என்ற எண்ணத்தோடே இவ்விதக் காரியங்கள் செய்யப்படுகின்றன.

தேகாப்பியாசம் செய்துகொள்ளுவதற்கான உபகரணங்களோடு கூடிய அறைகள் இருக்கின்றன. ரஸ்தாக்களில் எவ்விதம் நடக்கவேண்டும், வாகனங்கள் எவ்விதம் போகவேண்டும்

என்ற அறிவையும் கற்பிக்க ரஸ்தா ஒன்றும் அங்கு மத்தியில் அமைக்கப்பட்டிருக்கின்றது. தொழிற்சாலைகள், வீடுகள் கட்டுவதற்கான கட்டைகள் இருக்கின்றன. அவர்கள் கட்டின வீட்டுக்கு உள்ளே தங்குவதற்கு ஏற்ற அளவில் அவ்வீடுகள் இருக்கின்றன. அதில் அவர்கள் இருப்பது அவர்களுக்கு மிகுந்த ஆனந்தத்தைக் கொடுக்கும். இப்பொழுது இரு குழந்தைகள் உட்காரத்தக்க அளவுக்குப் பெரிதாக இருக்கவேண்டும் எனப் பிரியப்படுகிறார்கள். இவ்வாறே கூட்டாக இருந்து வேலை செய்ய சிறுவர்களை இளமை முதற்கொண்டே பழக்கப்படுகிறது.

பள்ளிக்கூடத்தில் குழந்தைகளின் மனதைக் கவரக்கூடிய சித்திரங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. குழந்தைகளுக்கு சுதந்தரமும் நேசப்பான்மையும் அளிக்கப்படுவதோடு ஒழுங்கும் கற்பிக்கப்பட்டு வருகிறது என்றே மொத்தமாகச் சொல்லலாம். ஆரம்பப் பயிற்சியளிக்கப்படுகிறது. குடி அரசும், தற்சார்பும் அவர்களுக்கு அடி கோலப்படுகின்றன. குழந்தைகளின் இயற்கை சுபாவங்களுக்கேற்றபடி ஆடல், பாடல், சித்திரம் வரைதல் முதலிய காரியங்களும் நடத்தப்படுகின்றன. எல்லாவற்றையும் விட விசேஷமாக அங்குள்ள ஊழியர்களுடைய அன்பே அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்து வருகிறது.

சிறுவர்களுக்கு சமூகக்கலை கற்பிக்கப்படுவது மிக ஆச்சரியமாயிருக்கிறது. உதாரணமாக, "லெனின் யார்?" "ஸ்டாலின் யார்?" "கூட்டுப்பண்ணை, கூட்டுத்தொழிற்சாலை, செம்படை முதலியவைகள் என்ன?" என்பன போன்ற கேள்விகளைக் கேட்டு அறிவு புகட்டப்படுகின்றன. இவைகளை நன்கு கற்றறிந்த பயிற்சி பெற்ற அறிவாளிகளால் கற்பிக்கப்பட்டு சம்பாஷிக்கவும் படுகிறார்கள்.

அறைகள் விலாசமானதாயும் காற்றோட்டமுள்ளதாயும் இருக்கின்றன. அவ்வறைகளில் தாழ்வான போஜன பாத்திரம் வைக்கும் பெட்டிகள் இருக்கின்றன. அவற்றிலுள்ள ஆகார பாத்திரங்களை குழந்தைகள் தாங்களாகவே எடுத்து உபயோகப்படுத்தி பின் தாங்களாகவே அதேயிடத்தில் வைக்கவும் பழக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு அறையின் மூலையிலும் இயற்கையான செடி கொடிகள் நிறைந்த பாத்திகள் இருக்கின்றன. மற்றொரு மூலையில் ஒரு ஸ்டாண்டில் ஆசிரியர்களால் கையால் எழுதப்பட்ட புத்தகங்களும் பிள்ளைகளால் வரையப்பட்ட சித்திரங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. 6 வயதுக்

குட்பட்ட சிறுவர்கள் அங்கு கூடி எழுதவும் எண்ணவும் கற்றுக் கொள்ளுகிறார்கள். 6 முதல் 7 வயதிற்குட்பட்டவர்களுக்கு பிரஷ்களையும், டஸ்டர்களையும், சமயல் செய்யும் பாத்திரங் களையும், தட்டு முட்டுச் சாமான்களையும், முட்டையடிக்கும் கருவிகளையும் வைக்கத்தகுந்த பெட்டிகள் இருக்கின்றன. அதைவிடப் பெரிய பையன்கள் அரம், சுத்தி முதலிய உபகர ணங்களைக் கொண்டு செய்யக்கூடிய வொர்க் ஷாப் வேலைகள் பழகிக்கொள்ளுகிறார்கள். ஆசிரியர்களுடைய யோசனையின் படி பல சிறு சாமான்களைச் செய்கிறார்கள்.

மாதமொரு முறை உத்தியோகஸ்தர்களுடைய கூட்டம் கூட்டப்படுகிறது. சில குறிப்பிட்ட பிரச்சினைகளைப்பற்றி அதில் கலந்து பேசுவார்கள். விழாக்களும் கொண்டாடுகிறார் கள். ஊர்களைச்சுற்றிப் பார்க்கவும் போகிறார்கள். தினசரி செய்யவேண்டிய வேலைத்திட்டங்களை ஒவ்வொரு நாளும் தயாரிக்கிறார்கள். ஒவ்வொரு உபாத்தியாயினியும் வருடம் 3 ரிப் போர்ட்டுகள் வெளியிடுகிறார்கள். ஒவ்வொரு குழந்தையின் தேர்ச்சியைப்பற்றி தினசரி குறிப்புகளும் குறித்து வைக்கப்படு கிறது.

அவ்விடுதிகளுக்கு நடுவில் பெரிய அறை ஒன்றிருக்கிறது- அதில் பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன. அதைஒருகண்காட்சிசாலைஎன்றேசொல்லலாம். சுவரில் படங்களும், குறிப்புகளும் நிபாசங்களும் கேள்விகளும் எழுதி தொங்கவிடப்பட்டிருக்கின்றன. பெற்றோர்களுடைய கூட்டமும் இந்த இடத்தில் ஒவ்வொரு மாதமும் கூடுகிறது. அவ்வமயம் பொது பிரச்சினைகளைப்பற்றி யோசிக்கப்படுகின் றது. பெற்றோர்கள் அடிக்கடி விடுதிகளுக்கு வந்து பார்வை யிடவும் ஆசிரியர்களது வேலைகளை கவனிக்கவும், ஆசிரியர் கள் அதுபோல்பெற்றோர்களுடைய வீடுகளுக்குச் சென்று குழந்தைகளிடத்தில்காணப்படுகிறகுறைகளுக்குகாரணம்அறிந்து வரும்படியாகவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலே கூறிய விஷயங்களிலிருந்து மற்ற சர்க்கார் நூறு வருஷத்தில் அடைய முடியாத பலனை சோவியத் சர்க்கார் 10 வருடத்தில் அடைந்து விட்டது என்பது பிரத்தியட்சமான விஷயம். இது தவிர அச்சர்க்கார் குழந்தைகளின் கல்வி விஷ யத்தில் எவ்வளவு சிரத்தை கொண்டு உழைத்து வருகிறார்கள் என்பது எல்லாரும் கவனிக்க வேண்டிய விஷயமாகும். ருஷ்யா, உலகத்துக்கு பலவிதமான பாடங்களைக் கற்பித்துக்கொண்டு வருகிறது. அதில் இதுவுமொன்று. (ரீசன்.)

# பொதுவுடமைத் தேசத்தில் கிரிமினல் குற்றங்கள்.

சோவியத் தேசத்தின் நாவலாசிரியரான தோழர் எம். அலகஸிடார்ஸ்டாய் லண்டனில் மார்ச்சு மீ 13ந் தேதியில் பேசுகையில் கூறியதாவது:—

"வெண்கடல் கணவாய் வெட்டின வரலாற்றை விளக்கும் கைதிகள்" என்ற பெயருடன் கூடிய படக்காட்சியை நான் கண்டதில்லை. ஆனால் அப்படத்தில் விவரிக்கப்பட்ட கைதிகளை நேரில் கண்டு பேசியிருக்கிறேன்.

ஒரு சமயம் நான் தோழர் மக்சிம்கார்க்கினுடைய வீட்டிற்கு விருந்தினனாய் சென்றிருந்தேன். அவ்விடத்தில் செந்நிறத்தோடு கூடிய உரோமத்தையுடைய மனிதனைச் சந்தித்தேன். அவர் ஒரு பெரிய கவிராயரைப்போல் என்னோடு சம்பாஷிக்கலானார். 'நான் ஜெயிலில் இருக்கும்போது தங்களுடைய நூல்களைப் படித்திருக்கிறேன்' என்று கூறினார். உடனே மிகுந்த ஆச்சரியத்தோடு 'தாங்கள் ஏன் கைதியாக்கப்பட்டீர்கள்' என வினவினேன். 'சூதாட்டத்தில் நான் கைதேர்ந்தவனாயிருந்தபடியால் அமைதியைக் கெடுத்துவிட்டதாக' எனப் பதிலிறுத்தார்.

இவர்தான் இன்று பெரும்புகழோடு விளங்கி வருகிறார். பல வருடங்களுக்கு முன் இவர் கைது செய்யப்பட்டு 10 வருடம் தண்டிக்கப்பட்டு தனி சிறைவாசம் செய்யும்படியாகத் தீர்ப்புச் செய்யப்பட்டார். புதிய ஜில்லா அமைக்க சர்க்கார் தொடங்கியபோது இம் மனிதர் தான் முதன் முதல் சேவை செய்ய முன் வந்தார். இவர் தன் சகாக்களான மற்ற குற்றவாளிகளோடும் கலந்து பேசி மாஸ்கோ நகரத்திற்கு அருகில் ஓர் இடத்தைப் பெற்றார். ஆரம்பத்தில் 20 அல்லது 30பேர்கள் தான் இருந்தார்கள். இவர்கள் நிலத்தை உழுது சாகுபடி செய்ய ஆரம்பித்தார்கள். குடியிருக்க வீடுகட்ட ஆரம்பித்தார்கள். ஒரு இயந்திர—தொழிற்சாலை ஏற்படுத்தினார்கள். அத்தொழிற்சாலையின் மூலமாக விளையாட்டு அதாவது டென்னிஸ் விளையாடுவதற்கு வேண்டிய பொருள்கள் உற்பத்தி செய்து கொள்வதற்காகவே அதை ஆரம்பித்தார்கள்.

இச் செய்தி சிறிது காலத்திற்குள் உலக மெங்குமுள்ள கைதிகளுக்கு எட்டியது. வெகு சீக்கிரத்தில் பல பாகங்களி லிருந்தும் கைதிகள் கும்பல் கும்பலாக இந்த ஜில்லாவில் வந்து குவியலாயினர். இதனால் அந்த ஜில்லாவும் வெகு விரைவில் விருத்தியடையலாயிற்று.

## முக்கிய விஷயம்.

இங்கு கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமாவது:—

இந்தஜில்லாவின் நிர்வாகம் அந்தஜில்லாவாசிகளாலேயே ஆளப்பட்டு வருகிறது. அவர்கள் மகா ஜனக்கூட்டங்கள் கூட்டி வேண்டிய விதிகளை அவ்வப்போது செய்து கொள் கிறார்கள். அந்த ஜில்லாவின் க்ஷேம லாபம் அவர்களுடைய உழைப்பைப் பொறுத்தே யிருக்கிறது. ஆரம்பத்தில் சிலவசதி கள் செய்து கொள்வதற்கும் தொழிற்சாலை ஏற்படுத்து வதற்கும் சர்க்கார் சிறிது மூலதனம் கடனாகக் கொடுத்துதவி னார்கள்.

அந்த ஜில்லா ஒரு சிறை வாசஸ்தலம் என்று நினைக்கவேண்டாம். அந்த ஜில்லாவைச் சுற்றி சுவர்களோ கம்பிகளோ இல்லை. சுயேச்சையாக எங்குவேண்டுமானாலும் போகலாம். ஆனால் அந்த ஜில்லாவாசிகளே தங்களுக்குள் சிலரைத் தெரிந்தெடுத்து தங்கள் ஜில்லா வாசிகள் வெளி யேறிப்போகாமல் பார்க்கும்படியாக நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்குள் யாராவது குற்றஞ்செய்துவிட்டால் அந்த கைய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கச் செய்து அவர்களே தங்கள் குற்றத்திற்கு வருந்தும்படியாகச் செய்யப்படுகிறது. அந்த ஜில்லாவில் கூடும் ஜெனரல் மீட்டிங் அதன் மெம்பர்க ளின் ஒழுக்கத்தையும் நீதிக்குரிய நன்னடக்கையையும் விசே சமாக கவனித்து வருகிறது. அந்த ஜில்லாவில் உள்ளவர் கள் விவாகம் செய்து கொள்ளும் விஷயத்தையும் அந்த ஜெனரல் மீட்டிங்குதான்முடிவு செய்யும்.

மாஸ்கோவுக்கு அருகிலுள்ள போல்ஷிவோ என்ற குற்ற வாளிகளின் ஜில்லாவைப் போய் பார்க்க நான்சென்றிருந்தேன். சுற்றிப் பார்த்துவரும்பொழுது ஞாபகமறதியாக ஒரு சவுக்கத் தில் உள்ள பெஞ்சியில் எனது சட்டையையும்அதில் பணத் தையும் வைத்துவிட்டு சிறிதுதூரம் சென்றுவிட்டேன். சிறிதுநேரங்கழித்து அது என் நினைவிற்கு வந்தது. என் னோடு வந்தவர்கள் அதைப்பற்றிப் பயப்படவேண்டியதில்லை என்றும்ஏனெனில் அங்குகள்ளர்கள் கிடையாது என்றும் நம் பிக்கை மோசம்செய்வதோ, திருடுவதோ எங்களதுஜில்லாவில்

என்ன என்பதே தெரியாது என்றும் கூறி என்னை தைரியப் படுத்தினார்கள். அவர்கள் சொன்னதுபோல் மாலையில் நான் அந்த இடத்தில் போய்ப்பார்த்தபோது அதே சவுக்கத்தில் (பார்க்கில்) அதே பெஞ்சியில் எனது சட்டையும் பணமும் இருக்கக் கண்டேன்.

இன்னும் அந்த ஜில்லாவின் வயது 10 வருடமாகிறது, அழகிய வீடுகளும், பள்ளிக்கூடங்களும், ரேடியோக்களும், நாடகக் கொட்டகைகளும் இன்னும் இதர வசதிகளும் செவ்வனே பொருந்தியதாயிருக்கிறது. சோவியத் யூனியன் முழுவதற்கு இன்றும் விளையாட்டுச் சாமான்கள் சப்ளை செய்து வருவதுபோல் ஷிவோவில் உள்ள தொழிற்சாலைகள்செய்து வருகின்றன. இந்த ஜில்லாவிலுள்ள மெம்பர்கள்நடந்து கொள்ளும் விதத்திலிருந்து அவர்களுக்குஏற்கெனவேவிதிக்கப்பட்டிருக்கும் சிறைவாச காலம் குறைக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக நான் முதலில் கூறின செக்கிறமான நண்பரையே எடுத்துக்கொள்ளுங்கள். அவருக்கு 10 வருடம் என்றிருந்தது பின்னால் 5 வருடமாக குறைக்கப்பட்டுவிட்டது. அவர் இன்று சூதாட்டத்திற்கு செல்லுகிறாரா என்றால் இல்லவே இல்லை. ஏன் இப்பொழுது அவர்தான் அந்த ஜில்லாவிற்கே டைரக்டராக இருந்துவருகிறார். மேலும் அவருடைய கவனமும் சக்தியும் சமூகமுன்னேற்றத்திற்கும் பொருள் உற்பத்தி செய்வதற்கும்சதா செலுத்தவேண்டியிருப்பதால்மற்றவிஷயங்களில் எப்படி அவர் தனது கவனத்தைச் செலுத்த முடியும்? அந்த ஜில்லாவில் உள்ள ஏனைய தோழர்களைப் போல் அவரது பொருளாதார நிலையும் இருந்து வருகிறது.

அந்த ஜில்லாவின் ஒவ்வொரு வருடாந்தரக் கூட்டத்திலும் அனேகர் பூரண உரிமையோடு விளங்கக்கூடிய மெம்பராக உரிமையளிக்கப்படுகிறார்கள். உயர்ந்த படிப்பு படிப்பதற்கு மட்டும் தலை நகரத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

அந்நகரத்தில் குடி ஏறிய பின்னர் சிலர் அறிவுக் குறைவாலும், சங்கங்களின் அமைப்புக் குறைவாலும் பழையபடி குற்றஞ் செய்து விடுகிறார்கள். இவர்களின் தொகை மிக மிகக் குறைந்து கொண்டே வருகிறது.

உலகத்தில் உள்ள கள்ளர்கள் கூடிஇன்று சோஷியலிசத்தை அமைத்து வருகிறார். அவர்கள் வெண்கடல்—பால்டிக் கணவாயை வெட்டியிருக்கிறார்கள். மேலும் அவர்கள்

மாஸ்கோ பட்டினத்தை ஓர் துறைமுகமாகச் செய்வதற்கான வால்கா—மாஸ்கவா என்ற கால்வாயை வெட்டி முடித்து வருகிறார்கள்.

இம்மாதிரி வேலை செய்வது கடுமையான தண்டனைக் குட்படுத்தப்பட்டவர்களின் செய்கை என்று நினைத்து விடாதீர்கள். யாருக்கும் வேலை செய்ய மறுக்க உரிமையுண்டு. ஆனால் அவ்வாறு மறுப்பதில்லை. ஏனெனில் வேலை செய்தால் சிறைவாசத் தண்டனை குறைவு படுவதோடு நாணயமாகவும் ஒழுக்கமாகவும் நடக்க இவ்வேலை பழக்குகிறது. அங்கு இன்று அனேகர் நாணயமான நகர வாசிகளாக இருந்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்பட்டவர்களே.

சென்ற வருடம் வால்கா—மாஸ்கவா கணவாயை வெட்டும் கோஷ்டியின் தலைவருடைய விருந்தினனாகப் போயிருந்தேன். விருந்து நேர்த்தியாக இருந்தது. தலைவரே எங்களுக்குப் பரிமாறினார். எங்களை வெகு அன்போடு உபசரித்தார்.

அன்று மாலையில் அவர்களுடைய நாடகச் சாலைக்குச் சென்றோம். அங்கு 'கைதிகள்' தாங்கள் செய்து முடித்த வேலைகளின் தோற்றத்தைத் தோற்றுவித்து அதற்குமுன் ஆடிப்பாடிக் கொண்டிருந்தனர். பகல் முழுவதும் கஷ்டப்பட்டுழைத்து மாலையில் கூடிக்களித்துத் தங்களது அலுப்பைப் போக்கிக்கொள்ளுகிறார்கள். பொதுவாகக் கூறவேண்டுமானால் சகலமும் நேர்த்தியாகவும் போற்றக்கூடியதாகவும் இருந்தன.

சோவியத் யூனியனில் உள்ள ஒருவன் எவ்வளவு துன்மார்க்கனாயிருந்தாலும் அவன் திருந்துவதற்கு வசதியும் சுதந்திரமும் அளிக்கப்பட்டு வருகிறது. எங்கள் நாட்டில் மோசமானவர்கள் ஒழுக்கங்கெட்டவர்கள் இல்லை. ஒருவன் ஒழுக்கங்கெட்டவனாயிருந்து வருவதற்கு அச்சமூகந்தான் ஜவாப்தாரி. துன்மார்க்கர்களைத் திருத்துவதற்குத் தகுந்த வேலை கொடுப்பதுதான் சரியான பரிகாரமாகும். அதில் யாராவது தவறினால் மறுபடியும் திருத்தி சரியான பிரஜையாக்கவேண்டும்''.

---

# பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0
பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0
கடவுள் ... ... ... ,, 0 5 0
நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0
வால்டேர் ... ... ... ,, 0 4 0
பேய்-பூதம்-பிசாசு .. ... ,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ... ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்டு ... ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் 0 6 0
ஷை 2-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0
ஷை 2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... ,, 0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.) 0 4 0

கிடைக்குமிடம்:—

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்) | 0 | 8 | 0 |
| 2. | பெண்ணும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை | 0 | 1 | 0 |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியா காண்டம் (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 8. | ,, ஆரண்ய காண்டம் | 0 | 4 | 0 |
| 9. | ,, கிஷ்கிந்தா காண்டம் | 0 | 4 | 0 |
| 10. | ஞானசூரியன் (மூன்றாம் பதிப்பு) 200 பக்கம் | 0 | 5 | 0 |
| 11. | தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 12. | [illegible] மெய்யா! பொய்யா! | 0 | 3 | 0 |
| 13. | [illegible] அல்லது பார்ப்பனர் கொடுமை | 0 | 4 | 0 |
| 14. | சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.) | 0 | 2 | 0 |
| 15. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 16. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 17. | சுயமரியாதைப் பாடல் | 0 | 2 | 0 |
| 18. | [illegible] (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 19. | [illegible] | 0 | 1 | 0 |
| 20. | [illegible] | 0 | 2 | 0 |
| 21. | [illegible] | 0 | 1 | 0 |
| 22. | [illegible] உபதேசம் | 0 | 0 | 9 |
| 23. | சமதர்ம உபதேசம் | 0 | 0 | 6 |
| 24. | சோதிட ஆராய்ச்சி | 0 | 4 | 0 |
| 25. | [illegible] | 0 | 2 | 0 |
| 26. | மறுப்புக்கு மறுப்பு | 0 | 3 | 0 |
| 27. | பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | 0 |
| 28. | புதுமலர் (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 29. | புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன் | 0 | 8 | 0 |
| 30. | [illegible] ஆட்சி | 0 | 6 | 0 |
| 31. | [illegible] | 0 | 5 | 0 |
| 32. | இங்கர்சால் பொன்மொழிகள் | 0 | 4 | 0 |
| 33. | [illegible]? | 0 | 2 | 0 |
| 34. | சாதியை ஒழிக்க வழி | 0 | 4 | 0 |
| 35. | [illegible] | 0 | 5 | 0 |
| 36. | பரிணாமவாதம் உண்மையா? | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம் :— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

*Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakam Press, Erode.*